# ஜனாதிபதி காங்கேசன்துறை விஜயம் திடீர் ஒத்திவைப்பு!


விலை ரூபா 1-00

ஈழநாடு
THE EELANADU

மலர் 24 புரட்டாதி 6 ஜுலகஜ் 4 இதழ் 221
யாழ்ப்பாணம் புதன்கிழமை 22—9—82



வீடியோ ரசிகர்களே!
இன்றைய வெளியீடுகள்!
போக்கிரி ராஜா
பயணங்கள் முடிவதில்லை
கலியுக கர்ணன்
குணம் வீடியோ
சென்ரர்
21, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். போன்: 24238
(4612)


[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை 3ம் கட்டப்பிரிவின் திறப்புவிழா வைபவம் ஒத்திப்போடப்பட்டுள்ளதுடன் ஜனாதிபதி தேர்தலின் பின்னரே இவ் வைபவம் நடைபெறுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

லங்கா சிமெந்து லிமிட்டெட்டின் ஆதரவில் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையின் 3வது கட்டமாக மேற்கொள்ளப்பட்டுள்ள சிமெந்து உற்பத்திப் பிரிவில் நிர்மாண வேலைகள் பூர்த்தியடையும் நிலையிலுள்ளதால் அக்டோபர் 10ம்

[8-ம் பக்கம் பார்க்க]

★ அதிகாலை இரண்டு மணியளவில் நிகழ்ந்த திகில் சம்பவம்!

# கொழும்பு-யாழ். மெயில்ரயிலில் ஆயுத முனையில் பயங்கரக் கொள்ளை!

## பல்லாயிரக்கணக்கான ரூபா நகைகளை பறிகொடுத்தனர்!

(வவனியா)

நேற்று அதிகாலை நிகழ்ந்த ரயில்கொள்ளையில் பல்லாயிரக்கணக்கான ரூப்பா பெறுமதிவாய்ந்த நகைகளை கொள்ளையர்கள் ஆயுதமுனையில் அபகரித்துச் சென்றுள்ளனர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்த இரவு மெயில் ரயிலில் தான் இப்பயங்கரக் கொள்ளை இடம் பெற்றுள்ளது.

பாதுகாப்புக் கருதி, 'உறங்கலிருக்கை' ரயில் பெட்டியில் பிரயாணம் செய்த பயணிகளுக்கே இப்பயங்கர அனுபவம் ஏற்பட்டுள்ளது என்றும், ரயிலை நிறுத்த மேற்கொண்ட முயற்சிகள் கூட உடனடியாகப் பலனளிக்காதது பெரும் அதிசயமாக இருந்தது என்றும் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

கொள்ளையில் பல பெண்கள் உட்படப் பலர் காயமடைந்ததுடன், தாலிக்கொடிகள், சங்கிலிகள், 'ஜிப்ஸி' நகைகள் மற்றும் கைக்கடிகாரங்கள் உட்படப் பல பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன!

கொழும்பு கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த மெயில் வண்டியிலேயே நேற்று அதிகாலை 2 மணிக்கு இக்கொள்ளை நடந்தது.

பொல்காவலை கல்கமுவ ரயில் நிலையங்களில் ஏறிய சுமார் 50க்கு மேற்பட்ட கொள்ளை கோஷ்டியினர் வவனியாவரை சிற்றுண்டி சாலையில் தங்கியிருந்ததாகவும் ரயில் வவனியாவை தாண்டியதும் உறங்கலிருக்கை பெட்டிகளில் புகுந்து கொள்ளையை நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

இவர்களும், ரயிலில் சோடா விற்பனை செய்தவர்களும் கலந்துகொண்டதாகபிரயாணி ஒருவர் தெரிவித்தார்.

அதிகாலை 2மணிக்கு உறங்கலிருக்கை பெட்டியில் நல்ல உறக்கத்திலிருந்த போது, இக் கோஷ்டியினர் திடீரென புகுந்து பயமுறுத்தி கொள்ளை நடத்தினார்கள். சிலர் பயத்தி

[8ம் பக்கம் பார்க்க]

## 3 சந்தேகநபர்கள் மாங்குளத்தில் கைது!

(யாழ்ப்பாணம்)

ஓமந்தையில் நடந்த ரயில் கொள்ளை சம்பவம் தொடர்பாக நேற்று நண்பகல் மூன்று சந்தேகநபர்கள் நகைகளுடன் மாங்குளத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 13 கைக்கடிகாரங்களும், ரொக்கப்பணமும், நகைகளும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் சிலர் கிளிநொச்சியிலும், மாங்குளத்திலும் இறங்கி ஆஸ்பத்திரிக்கு சென்றனர்.

[8ம் பக்கம் பார்க்க]

## நியமனக் குழு நேற்றுக் கூடவில்லை

[கொழும்பு]

வட்டுக்கோட்டைத்தொகுதி பாராளுமன்ற அங்கத்தவர் நியமனம் சம்பந்தமாக முடிவு எடுக்கும்பொருட்டு நேற்றுக் கூடவிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் நியமனக் குழு நேற்றுக்கூடவில்லை.

நியமனக் குழு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு எதிர்க்கட்சி முதல்வரின் கொழும்பு இல்லத்தில் கூடி வட்டுக்கோட்டை புதிய எம். பி. பற்றி முடிவு செய்யும்.

நியமனக்குழு நேற்றுக்கூடும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் கூட்ட ஒத்திவைப்புக்கான காரணம் உடனடியாகத் தெரிவிக்கப்படவில்லை.

## 'உடன் நடவடிக்கை எடுங்கள்"

### யாழ். எம். பி. அனுப்பிவைத்த அவசரத் தந்திகள்

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு நேற்றுக் காலையில் வந்து சேர்ந்த மெயில் ரயிலில் நடைபெற்ற தாக்குதல், கொள்ளைச சம்பவங்கள் குறித்து உடன் நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் போக்குவரத்து அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர், பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு அவசரத் தந்திகளை நேற்று அனுப்பிவைத்துள்ளார்

அத்தந்தியில் திரு. வெ. யோகேஸ்வரன் குறிப்பிட்டுள்ளதாவது:-

"கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பிரயாணிகளின் பாதுகாப்புக் குறித்து பாராளுமன்றத்திலும், வெளி

(8-ம் பக்கம் பார்க்க)


யாழ். நகரில் நவீனவசதிகள் கூடியது
ஹோட்டல் றெலெக்ஸ்
தேன்சிந்தும் ஐஸ்கிறீம், பொம்பே சுவீற்ஸ் வகைகளுக்கும் சுவைமிக்க கோழிப்புரியாணி வகைகளுக்கும் யாழ்.நகரில் சிறந்து விளங்கும் ஸ்தாபனம்
HOTEL ROLEX
340, ஆஸ்பத்திரி வீதி – யாழ்ப்பாணம்
4559

MASTER COURSE IN
AIR CONDITIONING and REFRIGERATION
புதிய வகுப்புகள் ஆரம்பம்:-
27 - 9 - 1982
உடன் தொடர்பு கொள்ளவும்.
Auto Cool Engineers
(சாந்தி தியேட்டர் அருகாமையில்)
கந்தப்ப சேகரம் ரோட்,
யாழ்ப்பாணம்.
4614

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புனரமைக்கப்பெற்ற C. 90, C. 50, C. 70 மோட்டார் சைக்கிள்களும் DELICA வான்களும் விற்பனைக்குண்டு. மற்றும் எந்தவிதமான வாகனங்களும் குறைந்த விலையில் ஆடருக்கு நேரடியாகத் தருவித்துக் கொடுப்போம். நா. சாம்பசிவம் அன் கோ. 54 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். 4563

யாழ்ப்பாணம் நம் 44 கஸ்தூரியார் வீதியில் கேந்திரஸ்தானத்தில் அமைந்துள்ள கடை ஒன்று உடன் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 4574 மே/பா "ஈழநாடு" லிமிட் யாழ்ப்பாணம். 4574

கண்டிவீதி சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கருகாமையில் வீட்டுடன் கூடிய கடை விற்பனைக்குண்டு. தொலைபேசி வசதியுமுண்டு. தொடர்பு: செ. யோசரத்தினம், நாதன் ஸ்ரோஸ், சாவகச்சேரி. (4594)

திருநெல்வேலி பாம்ஸ்கூலில் இருந்து 100 யார் தூரத்தில் ஏறத்தாழ 3½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: சி. பாலசுப்பிரமணியம், தபாற்கந்தோர் பங்களா, சோண்டாவில். 4576

இருபாலைவீதி கோண்டாவிலில் 3½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சு. அப்பையா, நெட்டிலிப்பாய், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (4596)

கோப்பாய் தெற்கு, பழைய வீதியில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வீடு/கடை கட்ட வசதியான இடம். க. நாகராசா, (சங்கக்கடை அருகாமை), பழைய வீதி, கோப்பாய். (4600)

## சோதிடம்

வெளிநாடு செல்லுதல், தொழில், கல்வி, திருமணம் முதலியன குறிப்புடன் ரூபா 10/- அனுப்புக. K. L. M. Krishnapillaiy, 83, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். (4603)

## லெபனன் ஜனாதிபதி

பெய்ரூட் செப்.21

லெபனன் புதிய ஜனாதிபதியாக படுகொலை செய்யப்பட்ட ஜனாதிபதி பஸிர் கமாயலின் மூத்தசகோதரர் அமின் கமாயல் தெரிவு செய்யப்படவிருக்கின்றார் என்று உறுதியாகிவிட்டது. (க)

# முக்கிய அறிவித்தல்

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
## சோலைவரி
## 3-ம் கந்தாயம் 1982

1982-ம் ஆண்டு 3-ம் கந்தாயத்திற்கான சோலைவரிப் பணம் 30-9-82-ந் திகதிய வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு முன்பதாக மாநகராட்சி மன்ற பணியகத்தில் செலுத்தப்படுதல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் விபரங்களின்படி வெலியாத்துப்பணம் அறவிடப்படும்.

| | |
|---|---|
| வெற்றுக் காணிகள், குடியிருப்புக் காணிகள் | — 15% வீதம் |
| இவையல்லாத காணிகள் | — 20% வீதம் |

காசோலைகள், காசுக்கட்டளைகள், அஞ்சல் கட்டளைகள் "யாழ்ப்பாண மாநகர ஆணையாளரின்" சார்பில் அஞ்சல் சேவையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு முன்கூட்டியே அனுப்பப்படல் வேண்டும். அப்படியாக அனுப்பப்படும் பொழுது வரியிறுப்பாளர்கள் ஆதனத்தின் தற்போதைய வரி மதிப்பு இலக்கம், வீதியின் பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்களுடன் வரிப் பணத்தை அனுப்பும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

சீ. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
17-9-82. (4598)

# பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

தெகிவளை, 29ஏ, முகாந்திரம் ஒழுங்கையைச் சேர்ந்த காலம் சென்ற சின்னத்தம்பி சொலமன் சாமுவேல் என்பவரின் மரணசாதனமில்லாத சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

றீனி காருண்யச்செல்வி யோகநாதன், 28, வேம்படி ரோட், யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. ரி/3639

மேலேயுள்ள இலக்கங் கொண்ட தத்துவகாரருக்கு மேலே குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லாத சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரும் 1982-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 24-ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றின் முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றீர்.

1982-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 9-ந் திகதியாகிய இன்று தேதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி

தா. குலஞானம்,
பதிவாளர்.

வை.ச. செந்திநாதன்,
மனுதாரின் சட்டத்தரணி.
(4606)

# மணல் கடத்துவதைத் தடுப்பதுபற்றி ஆலோசனை

(புலோலி)

கற்கோவளம், வராத்துப்பளை, வல்லிபுரப்பகுதிகளில் களவாகக் கடற்கரை மணல் கடத்தப்படுவதைத் தடை செய்வது பற்றி ஆராய்வதற்கான கூட்டமொன்று பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு வை. வேலும்மயிலும் தலைமையில் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

பருத்தித்துறை பிரதேச சபைத்தலைவர் திரு. சி. மு. கந்தசாமி, மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. மு. தம்பிமுத்து, பொலிஸ் அதிகாரிகள், கிராமோதய சபைத்தலைவர்கள் கிராமசேவை அலுவலர்கள், விசேடசேவை உத்தியோகத்தர்கள், புலோலி பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கப் பிரதிநிதிகள் இப்பகுதிகளில் மணல் கடத்தப்படுவதனால் உடனடி பாதிப்பிற்குள்ளாகும் கிராம மக்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைத்தலைவர் திரு. சு. நடராசாவின் பணிப்பின் பேரிலேயே இக்கூட்டம் நடைபெற்றது. கற்கோவளம், வராத்துப்பளை, வல்லிபுரப் பகுதியில் கடற்கரைமணல் களவாகக் கடத்தப்படுவதனால் ஏற்படவுள்ள பேராபத்தைப் பற்றி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். வயிரமுத்து (ஜே.பி) யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவரிடம் நேரிற் சென்று புகார் செய்திருந்தார்.

# பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

காலஞ்சென்ற யாழ்ப்பாணம், கந்தர்மடம், குமாரசாமி ரோட், 93/4ம் இலக்கத்தைச் சேர்ந்த கார்த்திகேசு சின்னத்தம்பி செல்லத்துரை பெண் பரமேஸ்வரி என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம்) இல. ரி/3680

கார்த்திகேசு சின்னத்தம்பி செல்லத்துரை.
93/4, குமாரசாமி ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

மனுதார்

எதிராக

1. வேலுப்பிள்ளை தம்பிஐயாவும்
2. பெண் நாகரத்தினமும். இருவரும் 93/4, குமாரசாமி ரோட், கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2'ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

தா. குலஞானம்,
பதிவாளர்

1982ம் ஆண்டு 6 மாதம் 30ந் திகதியாகிய இன்று திகதியிடப்பட்டது.

வரைவு
இராமலிங்கம் பாலசுப்பிரமணியம்,
சட்டத்தரணி

4608

# நீதிமன்றம் வராதவருக்கு றிமாண்ட்!

(சாவகச்சேரி)

கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கடன் கட்ட தவறியதாக குற்றம்சாட்டி தொடரப்பட்ட வழக்கில் மீசாலை வடக்கைச் சேர்ந்தசின்னத்தம்பி கந்தசாமி றிமாண்டில் வைக்கப்பட்டார்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரி தொடர்ந்து மன்றுக்குச் சமுகமளிக்கத் தவறியதால் நீதிபதி எதிரியை 20 ம் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார். (க)

உ

# தசாககிரியை அறிவிப்பு

## பிரம்மஸ்ரீ அ. இராமச்சந்திரசர்மா

13-9-82 திங்கட்கிழமை சிவபதம் அடைந்த எமது தந்தையார் பிரம்மஸ்ரீ அ. இராமச்சந்திரசர்மா அவர்களின் தசாககிரியை 22-9-82 புதன்கிழமை காலை 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அன்றும் அதைத் தொடர்ந்து நிகழ இருக்கும் கிரியை நாட்களிலும் சமுகம் தந்து உற்றார் உறவினர் நண்பர்கள் எல்லோரையும் எமது தந்தையாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

22-9-82 புதன்கிழமை
தசாகம் காலை 10 மணி
23-9-82 வியாழக்கிழமை
புண்ணிய சுவாசனம் சுரோத கும்பம்
24-9-82 வெள்ளிக்கிழமை
சபிண்டீகரணம்
25-9-82 சனிக்கிழமை
கிரயக்ஞம்

இங்ஙனம்
இ. மகாலிங்கம்.

மூளாய் ரோட், வட்டுக்கோட்டை. (4610)

## WANTED — BOOK KEEPER

Wanted an experienced book-keeper with typing experience for a leading mercantile firm in Jaffna. Starting salary Rs. 750/-. Apply on or before 25th September 1982.

To:
MANAGEMENT INFORMATION SERVICE,
NO: 68, Kannathitty Road,
JAFFNA. 4605

# விக்ரர் அன் சன்ஸ்

100, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## எங்கள் புதிய தொலைபேசி இலக்கம்: 23346

எங்கள் புதிய தொலைபேசி இலக்கத்தை அறிவிக்கும் அதே நேரத்தில் இதுவரை காலமும் இரவு பகலாக வெளி இடங்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்வதற்கு சேவைபுரிந்த தொலைபேசி தொடர்பு அதிபர்கள், ஊழியர்கள் யாவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

4593

### அமெரிக்க, பிரெஞ்சு, இத்தாலிய

# துருப்புக்கள் மீண்டும்மூன்று நாட்களில் பெய்ரூட் செல்லும்!

## அமைதியை நிலைநாட்ட உடன் நடவடிக்கை

பெய்ரூட், செப். 21

பெய்ரூட்டில் மீண்டும், அமைதியை நிலைநாட்டுவதற்குஅமெரிக்க, பிரெஞ்சு, இத்தாலிய துருப்புக்கள் இன்னும் மூன்று தினங்களில் அனுப்பிவைக்கப் படவிருக்கின்றன.

பலஸ்தீனியர் அகதிகள்முகாமில், பெண்களும், சிறுவர்களும், பொதுமக்களும் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

லெபனுனுக்கு துருப்புக்களை அனுப்ப பிரஞ்சு தயாராகவுள்ளதென பிரஞ்சு ஜனதிபதி தெரிவித்தார்.

அமெரிக்க துருப்புகளும் அனுப்பிவைக்கப்பட்ட விருப்பதாக, அமெரிக்க ஜனதிபதி திரு. றீகன் தெரிவித்தார்.

இஸ்ரேலிய துருப்புக்கள் பெய்ரூட்டிலிருந்து வெளியேறினல் தான் லெபனுனில் மீண்டும் அமைதியை ஏற்படுத்தலாமென்றும் ஜனதிபதி றீகன் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனிய முகாம்களில் உள்ளோர் படுகொலை செய்யப்பட்டதற்கு உலக நாடுகள் பலத்த கண்டனம் தெரிவித்து வரும் அதே வேளையில், லெபனுன் அமைச்சரவை நேற்றுக் கூடி, 3 நாடுகளின் துருப்புக்களை வரவழைப்பதென முடிவு செய்துள்ளது.

லெபனுனிலுள்ள வலதுசாரி தீவிரவாதிகளே இப்படுகொலையைச் செய்துள்ளார்கள் என ஊர்ஜிதமற்றசெய்திகள் வெளிவந்துள்ளது.

பாலஸ்தீனிய முகாம்களில் உள்ளவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளது கவலையளிப்பதாக உள்ளது என ஜனதிபதி றீகன் தெரிவித்துள்ளார்.

லெபனுனில் அமைதியை நிலைநாட்டுவதற்கு3 நாடுகளின் துருப்புக்கள் லெபனுன் வருவதற்கு இஸ்ரேல் அங்கீகாரம் அளிக்குமென நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகதிகள் முகாம்களில்ஒன்றுமறியாத அப்பாவிகளான பெண்களையும், சிறுவர்களையும், சுட்டுக்கொன்றது காட்டுமிராண்டித்தனமான செயலாகுமென்றும், இதனை பாரதம் வன்மையாக கண்டிப்பதாகவும், பாரதவெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

லெபனுனிலிருந்து பலஸ்தீனியர் வெளியேற்றப்பட்ட திட்டத்திற்கு இதுபெரும்முரணுன செயலாகுமென்றும் அவர் தெரிவித்தார். (க)

### 'பிளாஸ்டிக்' அறுவைச் சிகிச்சைமூலம்

# கையில், கால்விரல் பொருத்தப்பட்டது!

சென்னை. செப். 21

சென்னையிலுள்ள மருத்துவமனையில் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை மூலம், 10 வயது சிறுவனுக்கு கால் விரல்கள், வலது கைவிரல்கள் இருந்தஇடத்தில் பொருத்தப்பட்டன.

வடஆற்காட்டு மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவரின் மகனுன கோவிந்தன்என்ற இச்சிறுவன் கடந்த ஜூன் மாதம் நடந்த விபத்தொன்றில் கைவிரல்களை இழந்தான்.

இப்படியான அறுவை சிகிச்சை செய்வது இதுதான் முதல்தடவையாகுமென டாக்டர்கள் குழு தலைவர் டாக்டர் வெங்கடசாமி தெரிவித்தார்.

இந்த அறுவைச் சிகிச்சை சுமார் 9மணிநேரம் நீடித்தது.

இரு வாரங்களில், சிறுவன் குணமடைந்து விடுவானென டாக்டர்கள் தெரிவித்தனர். (க)

## தட்சர் ஜப்பான் விஜயம்

டோக்கியோ செப். 21

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிரட் தாட்சர் ஆறுநாள் விஜயத்தை மேற்கொண்டு ஜப்பான் சென்றுள்ளார்.

பிரதமர் திருமதி தாட்சர் தூர கிழக்கு நாடுகளுக்கான 13 நாள் விஜயத்தின் முதல் கட்டமாகவே ஜப்பானுக்குச் சென்றுள்ளார்.

ஜப்பானியப் பிரதமர் திரு. சென்கோ ஸூக்கியுடனும், உயரதிகாரிகளுடனும் பேச்சு வார்த்தைகளில் திருமதி தாட்சர் ஈடுபடவுள்ளார்.

# தமிழ்நாட்டில் புதிதாக 18,300தொலைபேசி இணைப்பு!

சென்னை செ 21

தமிழ் நாட்டில் இவ்வருடம் புதிதாக 18,300 தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படவிருப்பதாக சென்னையில் நடந்த வர்த்தகர் சங்கக்கூட்டத்தில் பேசிய ''மெட்ருஸ் டெலிபோன்'' பொதுமுகாமையாளர் திரு. கே. சி. ராம் தெரிவித்தார்.

புதிதாக தொலைபேசி இணைப்பு பெற 22,000 பேர் விண்ணப்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

புதிய இணைப்புதிட்டத்தின் மூலம் ஒரு பகுதியினருக்கு உடனடியாக தொலைபேசி வசதிகிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (க)

## வெள்ள நிலைமை மோசம்

புதுடில்லி செப். 21

பாரதத்தில், அசாம், அருணலப் பிரதேசங்களில், வெள்ள நிலைமை மோசமடைந்து வருகிறது.

## ஆக்கிரமிப்பை எதிர்ப்போருக்கு சோவியத் உதவிஅளிக்கும்

மாஸ்கோ, செப். 21

''மத்திய கிழக்குப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதை இனியும் ஒத்திப்போட இயலாதென்பதை லெபனுன் நிகழ்ச்சிகள் காட்டுகின்றன. இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு முடிவு கட்டப் பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்; இதில் எள்ளளவும் காலதாமதம் கூடாது'' என்று 'பிராவ்தா' பத்திரிகை ஆசிரிய தலையங்கம் எழுதியுள்ளது.

''அமெரிக்காவின் ஆதரவு இல்லாமல், இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்கள்இவ்வளவுவேகத்துடன் நடந்துகொள்ள முடியாது என்பது தெளிவு. எனவே லெபனுனில் நிகழ்த்தப்பட்டுள்ள கொடுங்குற்றங்களுக்கு அமெரிக்காவும் பொறுப்பாகும். லெபனுனிலிருந்து இஸ்ரேலியத் துருப்புக்கள் உடனடியாகவும் நிபந்தனையின்றியும் வாபஸ் வாங்கப்படவேண்டும் எனக்கோரும் ஐ. நா. பந்தோபஸ்து சபைத் தீர்மானங்களை அமெரிக்கா புறக்கணிக்கிறது; இதன் மூலம் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஓர் அரசியல் முகமூடியை அது உத்தரவாதம் செய்துவருகிறது. ஆக்கிரமிப்பாளர்களுக்குத் தலைவணங்காத அனைவருக்கும், இந்தப் பிராந்தியத்தில் சமாதானம் மற்றும் நியாயமான தீர்வுக்காக முனைந்துள்ள அனைவருக்கும் சோவியத் யூனியன் உதவி அளித்துள்ளது; இனியும் தொடர்ந்து உதவியளிக்கும்'' என்றும் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புகையிலைக் கூட்டுத்தாபன

# களஞ்சியத்தில் 22 ஆயிரம் பீடிப்புகையிலை தேக்கம்!

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு சுழிபுரம், பண்ணுகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் குழு ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தை அவரது மூளாயிலுள்ள இல்லத்தில் சந்தித்துத் தாம் உற்பத்திசெய்த பீடிப் புகையிலையை விற்பனைசெய்ய முடியாது இருப்பது குறித்துத் தமது கஷ்டங்களை நேரில் தெரிவித்தனர்.

கடந்த வருடங்களில் தாம் உற்பத்திசெய்த பீடிப்புகையிலைகள் இலங்கை புகையிலைக் கைத்தொழில் கூட்டுத்தாபனம் கொள்வனவுசெய்துவந்தது என்றும் இவ்வருடம் கொள்வனவுசெய்ய முன்வரவில்லையென்றும் இதனுல் தாம் மிகுந்த கஷ்டப்பட்டு உற்பத்திசெய்த பீடிப்புகையிலைகள் வீட்டில் தேங்கிக் கிடப்பதாகவும் இந்த விவசாயிகள் திரு. அ. அமிர்தலிங்கத்திடம் விபரமாக தெரிவித்தனர்.

இது தொடர்பாகத் தாம் ஏற்கனவே இலங்கைப் புகையிலைக் கைத்தொழில் கூட்டுத்தாபனத்துடன் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளதாகவும். அவர்களிடம் சுமார் 22 ஆயிரம் மூடைகள், பீடிப் புகையிலைகள் கைவசம் களஞ்சியத்தில் இருப்பதால் இக்கொள்வனவு நடைபெறவில்லையென்று தெரிவித்துள்ளதாகவும், இதுபற்றித் தாம் சம்பந்தப்பட்ட அமைச்சுடன் தொடர்புகொண்டு ஆவன செய்வதாகவும் திரு. அமிர்தலிங்கம் மேற்படி விவசாயிகளிடம் தெரிவித்தார். [அ]

### ''இராணுவ ரீதியில்

# உலகின் செல்வாக்கைப் பெற அமெரிக்கா முயற்சிக்கிறது''

## சோவியத் அதிபர் குற்றச்சாட்டு

மாஸ்கோ செப். 25

இராணுவ ரீதியில் உலகின் செல்வாக்கைப்பெற்றுவிட அமெரிக்கா முயற்சித்து வருவதாக சோவியத்திற்கு விஜயம்செய்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு அளிக்கப்பட்ட விருந்தில், சோவியத் யூனியன் ஜனதிபதி திரு. பிரஸ்னேவ் தெரிவித்தார்.

இந்த விருந்தில் பேசிய பாரதப் பிரதமர் உலக நிலைமை மிக மோசமாகி வருவதாகத் தெரிவித்வார்.

மண்டல சார்பற்ற நாடுகளில் பாரதத்தின் நிலைமை பற்றியும் அவர் எடுத்துவிளக்கினுர்.

இருதரப்பு ஒத்துழைப்புபற்றியும், ஆராயப்பட்டது. சோவியத் வழங்கியுள்ள உதவிகளுக்கு பாரதப் பிரதமர் நன்றி தெரிவித்தார். தொழில் துறை, எரிசக்தி, அணுசக்தித் துறைகளில் சோவியத்தின்ஆதரவு தொடர்ந்தும் தேவைஎன்றும் திருமதி இந்திரா காந்தி தெரிவித்தார்.

மாஸ்கோவில் நடைபெற்ற முதல் சுற்றுப்பேச்சில், சர்வதேச நிலைமைபற்றியும், இருதரப்பு உறவுபற்றியும். பரிசிலனை செய்யப்பட்டது.

பாரத-சோவியத், பரஸ்பர ஒத்துழைப்பைச் சீராக்கி, விரிவாக்கவும், உலக பதட்டநிலையைக் குறைக்கவும், இச்சந்திப்பின்போது திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது.

அணு ஆயுதங்கள் பாவிப்பதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது அணு ஆயுதத்தை சோவியத் முதலில் பாவிக்காது என்ற அறிவிப்பை பாரதப் பிரதமர் இந்திரா காந்தி வரவேற்பதாக சொன்னுர்.

உலக சமாதானத்திற்கு பாரத- சோவியத் நட்புறவு ஒரு சின்னமாக விளங்குவதாகவும் இந்த நட்புறவு நீடிக்க வேண்டும் என்றும் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி தெரிவித்தார்.

பாரதப் பிரதமருக்கு சோவியத் ஜனதிபதி விருந்தளித்துக் கௌரவித்தார்.

அணுவாயுதங்கள் முடக்கிவைப்பதற்கு முன்னேடியாக, அணுவாயுத உற்பத்தியை நிறுத்திவைக்க வேண்டுமெனப் பாரதப்பிரதமர் தெரிவித்தார்.

வெவ்வேறு சமூகங்களுக்கிடையே வலுவான ஒத்துழைப்பை ஏற்படுத்தமுடியும் என்பதற்கு பாரத-சோவியத் உறவு ஒரு எடுத்துக்காட்டு என்று சோவியத் ஜனதிபதி பிரஸ்னேவ், இந்த விருந்தின் போது தெரிவித்தார்.

ஆறு வருடங்களுக்குப் பின்னர் பாரதப் பிரதமர் இந்திய சோவியத் விஜயத்தை மேற்கொண்டுள்ளார். (க)

## மன்ஞர் மாவட்டத்தில் 18பேர் வி. சே. அலுவலர்களாக நியமனம்

[மன்ஞர்]

மன்ஞர் மாவட்டத்தில் ஐ.தே. கட்சியின் சார்பில் மூதூர் எம்.பியும் மன்ஞர் மாவட்ட அமைச்சருமான ஜனுப் எம். ஈ. எச். மஹ்றூப் பின் சிபார்சில் 18 பேருக்கு விசேடசேவை அலுவலர் பதவிகள் வழங்கப்படும்.

இப் பதவிகள் இம்மாத இறுதியில் வழங்கப்படுமென மன்ஞர் மாவட்ட அமைச்சைச் சேர்ந்த அதிகாரியொருவர் தினபதி நிருபரிடம் தெரிவித்தார்.

இந் நியமனங்கள் மூலம் மன்ஞர் மாவட்டத்தில் விசேடசேவை அதிகாரிகளின் தொகை 36 ஆக அதிகரிக்கும்.

தற்போது இருகிராமசேவை அலுவலர்கள் பிரிவிற்கு ஒரு விசேட சேவை அலுவலர் வீதம் நியமிக்கப்பட்டனர். ஐ.தே. கட்சியின் சிபார்சில் 18 பேருக்கு விசேடசேவை அலுவலர் பதவி வழங்கப்பட்டதும் ஒரு கிராமசேவை அலுவலர் பிரிவிற்கும் தலா ஒவ்வொரு விசேடசேவை அலுவலர்கள் பணியாற்றுவார்கள்.

### பலஸ்தீனியப் படுகொலை விசாரணை வேண்டும்

லண்டன் செப். 21

பலஸ்தீனியர் முகாம்களில், பெண்களும், சிறுவர்களும் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக சுதந்திரமான விசாரணை நடைபெறவேண்டுமென இஸ்ரேல் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்யார்.

இப்படியான விசாரணைஒன்றின் மூலமே, இஸ்ரேல் இதில் சம்பந்தப்படவில்லையென உலக நாடுகளுக்கு எடுத்துக்காட்ட முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (க)

### பயிர்ச்செய்கையின் கூட்டம்

(யாழ்ப்பாணம்]

புங்குடுதீவு கிழக்கு பயிர்ச்செய்கையாளருக்கான 1982ம் ஆண்டு காலபோகக் கூட்டம் 25ம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு மடத்துவெளி சனசமூக நிலைய மண்டபத்தில் பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி. பே. இராமநாதன் தலைமையில் நடைபெறும். புங்குடுதீவு கிழக்கில் விவசாய நிலங்கள் உள்ள அனைவரும் கலந்து கொள்ளும்படி கோரப்பட்டுள்ளனர்.

## மணிவாக்கு

பழங்காலத்தில், நோக்கங்களைப் பரப்புவதற்கு ஒரே ஒரு வழி; செயல்—தொண்டு; செயலுக்கு அளவற்ற ஆற்றல் இருந்தது. இன்றைய எத்தனையோ பேச்சுக்களையும் எழுத்துக்களையும் விட பழங்காலம் போல் பொதுமக்களைக் கவரும் ஆற்றல் செயலில் மிகுதியாக இருக்கிறது. — மகாத்மாகாந்தி

# நமது நோக்கு

## தேர்தல் விடுதலை

ஒரு ஜன சமுதாயத்தின் நிலை உயர வேண்டுமாயின் அந்தச்சமுதாயத்தைச் சேர்ந்தமக்களின்கண் சோம்பலற்ற முயற்சியும் நல்ல அறிவும் இருக்க வேண்டும்.

''ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின் நீள் வினையால் நீளும் குடி''

இது தமிழ் முனிவர் தனி மக்களுக்கு அல்ல தமிழர் களுக்கு மட்டும் அளித்த உபதேசம் அல்ல. எல்லா மக்கள் தலைவர்களுக்குமென் பது குறிப்பிடத்தக்கது.

இது தனி மக்களுக்கு இருந்தால் சமுதாயம் உயரும் என்பதையும் நாம் கவனத்திற்கொள்ளவேண்டும்.

இன்றைய சமுதாயம் அரசியல் நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதால், அதனைத் தீர்க்கும்பணியில் அரசியல்வாதிகள் தத்தம் மருந்தே சிறந்ததென்று விளம்பரம் செய்ய, மக்கள் அவற்றில் நம்பிக்கை கொண்டு மோசம்போகின்றனர்; வாழ்வின் வேறு அம்சங்கள் இல்லைபோலும்.

எனவே அரசியல் நோய் பீடித்தமக்களும், அவர்களின் அரசியல் தலைவர்களுமே சமுதாயமாகக் கணிக்கப்படும் ஒரு தாழ்ந்த நிலை நடைமுறையிலிருந்து வருவது கண்கூடு.

சோம்பலற்ற முயற்சியும் நல்ல அறிவும் ஆட்சியிலோ அல்லது மக்களிலோ இன்று காண்பது அரிதினும் அரிது. தமிழ் மக்களின் மரபுக்கு மாறுபட்ட நிலை இது.

அரசியல்கட்சிகளின் முக்கியத்துவம், இன்றைய வாழ்வில் எவ்வளவுதூரம் குறைந்ததென நாம் கொள்ளலாமோ.

கட்சி என்னசொல்கிறது? என்று மக்கள் அதன் சிந்தனையில் கலந்துகொள்ளாது வெளியில் நின்று 'கூதற்காயு'ம் வழக்கத்தையே நாம் பிரலாபிக்கின்றோம்.

தனிமனிதனின் தெளிந்த சிந்தனை, செயல், ஊக்க முடைமையே அரசியல் கட்சிக்கோ வேறெந்த மக்கள் கூட்டத்துக்கோ இன்றியமையாதன.

ஜனாதிபதித் தேர்தலைப் பற்றிய முடிவை எதிர்பார்த்த பலருக்கு, தமிழர் விடுதலைக்கூட்டணி நீண்டகாலமாக, நீண்டநேரம் நடத்திய யோசனை மலையைக் கல்லி எலியைப் பிடித்தது போலாகும்.

குறிப்பாக அவர்கள் எடுத்த முடிவுக்குஆதாரமாகப் பட்டியலிட்ட ஏழுகாரணங்கள் 'றெடிமேட்' உடைபோன்று, விரைவாகவாசிக்கும் போது பஞ்சகவ்வியத்தில் ஒன்றான கோசலம் போல 'கழகழ' வென்ற தொனி உடையதாகக் காணப்படுகிறது.

நீண்ட அறிக்கைகளும் தீர்மானங்களும் சிலசமயங்களில் தர்ம சங்கடத்துக்கு ஒரு 'பிமற' மாதிரி உருபடன என்று இந்திய தேசிய காங்கிரஸ் விவகாரங்கள் பற்றி எழுதிய முன்னைய இந்தியப் பிரதமர் நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

ஜனாதிபதிதேர்தல் நாட்டுக்கு மட்டுமல்ல, நாட்டில் ஒருவிசேடபகுதியானதமிழ் பேசும் மக்களுக்கும், அவர்கள் வதியும் வெவ்வேறு மாவட்டங்களுக்கும் மிக முக்கியமான சம்பவம்.

இதில் தமிழ் மக்களின் பங்கை நிர்ணயித்த தமிழர் விடுதலைக் கூட்டணி மிகத் தெளிவான முடிவை எடுப்பதற்கு சிரமப்பட்டிருப்பது வெளிப்படை அந்த முடிவு, உடன்பாடு, அல்லது எதிர் மறையென்ற போக்கில், ஆணித்தரமான தெளிவு பெற்றிருக்கவில்லை. இந்த நிலை நடுநிலைமையென்பதல்ல குறிப்பிட்டதொரு கட்சிக்கு சாதகமாகலாம்.

தேர்தலில் பங்குபற்றுவதானால், ஆதரிப்பது ஆட்சியையா அல்லது எதிர்க் கட்சியையா? எதிர்க்கட்சி என்றால் எது? இவ்விடயங்கள் கட்சியின் கவனத்துக்கு வரவில்லையென்பது எமதுகருத்தல்ல; இந்த அடிப்படைக் கருத்துப் பரிமாறல்கள் மக்கள் அறியவேண்டியவை; பொதுச்சபையில்தீர்மானம் எடுத்தால் போதாது. பொதுஜன அபிப்பிராயம் கோரப்படாதது ஒருபெருங் குறை.

தேர்தலில் பங்குபற்றுவதில்லையென்றால் தமிழ் மக்கள் அதைத் தீவிரமாகப் பகிஷ்கரிப்பதா? அப்படியானாலும் அது ஒரு வெறும் எதிர்மறை செயல் அல்லவே! நாம் ஏன் பகிஷ்கரிக்க வேண்டுமென்று, பழைய 'உறுதிகளின்' வாசகங்களைப் புரட்டிப் படித்து காது புளிக்க வைக்காமல், இன்று பொருத்தமான காரணம் விளக்கப்பட வேண்டியது.

அதுதீவிரமான பகிஷ்கரிப்பு என்றால் அதற்கும் பிரசாரம் முதலிய கடின செயல்கள் இடம் பெற வேண்டும்; எங்களுக்குஇந்த நிகழ்ச்சியில் அக்கறைஇல்லை என்பது ஒரு சந்தேகமான நிலை. சந்தேகம் எதுவும் வெளிப்படுத்தப்பட்டு தக்க தீர்வு மக்கள் தீர்வாக மாற வேண்டும்.

சிங்கள ராச்சியம், சிங்கள ஜனாதிபதிஎமக்கென்ன அக்கறை? என்பது பழம் பாடம்; அதற்கு முரண்பாடற்ற முறையெனக் கருதி பாராளுமன்றம்சென்றும், தமிழர் விடுதலைப் போராட்டம நடத்திக் கொண்டும் இருக்கும்போது அதற்கு அர்த்தமுள்ள இந்த நிகழ்ச்சிகளில் ஏன் பங்குபற்ற முடியாது?

ஒன்று நாம் உணர்கின்றோம். தமிழ் மக்கள் சார்பில் பல விடுதலைப்பணிகளை மேற்கொண்டு இன்று தமிழர்களின் ஒரே குரல் என்று அரசாங்கம் மதிக்கும் அஞ்சும் வகையில் செயற்பட்டு வரும் தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பகையால், வெளித்தலையீட்டால் சீர் கெட்டுப்போகுமோ என்று தயங்கிய மக்கள் நட்டாற்றில் குதிரைமாறாது தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று தீவிரமாகக் குதித்தெழும்பிய இளைஞர் கூட்டத்துக்கு இது ஒரு சமாதானம் காணும் வழியென்பதால் ஆறுதலடையலாம்.

தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்திலோ, அல்லது தனித் தமிழ்நாடுஎன்ற லட்சியத்திலோ, தமிழர் விடுதலைக் கூட்டணிதான் ஒரே ஒரு இயக்கமென்று நாம் இறுமாந்திருக்கக் கூடாது; நாட்டிலும் வெளியிலும் ஊக்கமுடையோர், அறிவுடையோர் இதன் நடவடிக்கைகளை நிறுவன ரீதியில் ஊன்றிக் கவனிப்பதுடன், தவறு ஏற்படுங் காலத்தில், நெருக்கடியில் சரியான பாதைவிட்டு விலகாத தொண்டில் ஈடுபடும் சாத்தியம் உண்டு, விழிப்பில் விமோசனம் உண்டு.

# யாழ்.சைவபரிபாலனசபையும் சைவ மாநாடும்

## மக்கள் கருத்து

சைவசமயக் கொள்கைகளைப் பிரசாரம் செய்யும் நோக்குடன்ஆரம்பிக்கப்பட்ட தொன்மையான சைவ பரிபாலனசபை என்ற சைவ ஸ்தாபனம் ஆண்டுதோறும் கோடைகால விடுமுறையில் மூன்று நாட்களுக்கு மகாநாடு கூட்டி வந்தது.

நடைபெற்ற இடங்கள்: யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தமிழ்க்கலவன் பாடசாலை ஆடபோது யா. இ. க. விளையாட்டு மைதானம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பிரார்த்தனை மண்டபம், நாவலர் ஆச்சிரம மண்டபம்.

நடைபெற்ற வேளை: நாள் தோறும் காலையும் மாலையும்.

பயன் பெற்றோர்: முக்கியமாக இலங்கையின் பல்வேறு பாகங்களிலிருந்துவரும் ஆசிரியர்களும், மாணவர்களும்.

சபையே நண்பகல் உணவு, மாலைத்தேநீர் ஆகியவற்றை வழங்கியமையால் ஏற்பட்ட நன்மைகள், பேரறிஞர்களுடன் கலந்துரையாடும் வாய்ப்பு, சந்தேகங்களை நிவர்த்தி செய்தல் முதலியன.

நிதிவசதி: அப்போது போதிய நிதிவசதி சபையிடம இருக்கவில்லை. குறிப்பாகக் கல்லூரிஆசிரியர்களும், மாணவர்களும், பொதுவாக அயலவர்கள் பொதுமக்கள் உதவிய நிதியும், பொருட்களும், சரீர உதவியும், இம் மாநாடுகள் சிறப்பாக அமைய உதவியன.

ஆனால் பணவசதி, பொருள் வசதி, இடவசதி, அச்சக வசதி போன்றவை உள்ள இன்று நிலைமை என்ன?

மாநாடுகளில், பொதுக்கூட்டங்களில் அறிக்கை வாசிக்கப் படுகின்றது. செலவு செய்த கணக்கு—வழக்கு வாசிக்கப்படுகின்றது.

ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொள்ள முடியாத தினங்களில் மாநாடுகள் ஒழு செய்ய படுகின்றன

முக்கியமாக இவ்வாண்டு நீண்ட விடுமுறை இருந்தும். நல்லூர்த்திருவிழாக்கள் விடுமுறை முற்பகுதியிலேயே முடிவடைந்தும் இம் மாதம் 24, 25. 26ம் திகதிகளையே மாநாடு நடாத்த சபையோரால் தேர்ந்தெடுக்கப்பட்ட திகதிகளென மத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

பத்திரிகையில் மகாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது என்று செய்திவரலாம்.

ஆனால் அங்கு சென்றுலலலம்மோ தெரியும் ''சத்திர சிகிச்சை வெற்றி, நோயாளி குளோஸ்'' என்பது.

சபையின் வரலாறும், பாரம்பரியமும், நோக்கமும் புரியாமல் கணக்கு எழுதமட்டும் தெரிந்தவர்கள் கையிலிருந்து சபை மீள்வது எப்போ? பழைய நிலைகூட, பரமனே திருவருள் கூட்டாயோ?

சிதம்பரநாதச் செட்டியார்

சோமசுந்தரம்

411, கே.கே. எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

## மகாதேவா தாம்போதியும் அரசின் பொறுப்பும்

கடந்த 11–ம் திகதிய ஆசிரியர் தலையங்கம் ஏமாற்றத்தையும் கவலையையும் தருவதாக இருந்தது. மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் நிகழ்த்தப்பட்ட பேச்சுகள் பற்றி உங்களுடைய பத்திரிகையில் வந்தசெய்தி உண்மையானநிலையை எடுத்துக்காட்டுவதற்குத் தவறிவிட்டது அதை வாசிப்பவர்கள் உங்களைப்போல் சபை நிகழ்ச்சிகளைத் தவறுகப் புரிந்துகொள்வதற்கு இடமுண்டு. சபையில் பேசப்படும் கருத்துக்களைத் தெளிவுபடுத்தக்கூடிய முறையில் பிரசுரிப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். அர்த்தமற்ற பேச்சுக்கள் பேசுபவர்களாக எம்மை மக்கள் கணிக்கப்படாது.

மகாதேவா தாம்போதி வேலைகளை முடிக்கிறதை நாம் உணராமல் விடவில்லை. அதற்காகத்தான் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் தொகுதிக்கு ஒரு லட்சம் ரூபா ஒதுக்கி பத்துலட்சம் ரூபா மொத்தமாக ஒதுக்கினோம். பின்தங்கிய தொகுதியான கிளிநொச்சித் தொகுதிக்கும் ஒவ்வொரு லட்சம் ஒதுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக் கட்டிடடத்துக்கு தொகுதிக்கு ஐந்து லட்சம் வீதம் ஐம்பது லட்சம் ஒதுக்கப்பட்டது தேர்தலைப்பற்றிச் சிந்திக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எம்மை ஏளனம் செய்வதற்கு இடமில்லை. தொகுதிக்குத் தரப்படும் நிதி போதாது. தொகுதிக்கு 25 லட்சம் ரூபா கொடுக்கப்படுகிறது. 7 லட்சம் செலவுபோனால் மிகுதி 18 லட்சம். பள்ளிக்கூடக் கட்டிடங்களுக்குஇத்தொகைபோதாது. தெருக்களுக்குப் போதவே போதாது. மின்சார விஸ்தரிப்புகளுக்கும்போதாது. பரந்துவாழும் மக்களுடைய தேவைகளை உறுப்பினர்கள் உதாசீனம் செய்யமுடியாது.

மகாதேவா தாம்போதி போன்ற வேலையை மத்திய அரசாங்கம் பொறுப்பெடுத்து செய்யவேண்டும். வெளிநாட்டு அரசுகளின் உதவிகளுடன் தென்னிலங்கையில் எவ்வித கோடிக்கணக்கான பணத்தை செலவழித்து பெருஞ்சாலைகள் பாலங்கள் போன்ற வேலைகளை செய்கிறார்கள். எமது அபிவிருத்திக்கு மட்டும் அரசு வெளிநாட்டு உதவி பெற்றுத்தர கடமைப்பட்டுள்ளதா அல்லவா? மத்திய அரசின் பொறுப்பை நாங்கள் வலியுத்திப் பேசினேம். அதை வலியுறுத்தி எழுதவேண்டும். பாரிய வேலைகளை மத்திய அரசு பொறுப்பேற்று செய்யும் கடமையிலிருந்து தவறக்கூடாது நீங்களும் சுட்டிக்காட்ட வேண்டும். தட்டிக் கேட்கவேண்டும்.

சி. நாகராஜா,
யாழ். அபிவிருத்தி சபை உறுப்பினர்,
கந்தர்மடம்.

## யார் ஜனாதிபதியானாலும் தமிழ்மக்களின் நிலை மாறாது!

அந்நியர் கையிலிருந்து சிங்களத் தலைவர்கள் இலங்கையைப் பொறுப்பேற்ற நாள் முதல் இன்றுவரை தமிழினம் தனது சொந்த நாட்டில் கைவிலங்கிடப்பட்ட அடிமை போலவே மதிக்கப்பட்டு வந்திருக்கிறது. சிங்களஅரசியல் வாதிகள் மத்தியில் எழுந்த துவேஷமனப்பான்மைகளும் காலம்காலமாக இடம்பெற்ற அநியாயங்களும்தான் இன்று தமிழ் மக்கள் தமிழ்ஈழம் கோருவதற்கு ஏதுவாகின.

சில தமிழ் அரசியல்வாதிகள் சிங்களத் தலைவர்களுடன் உரிமை கோரிவாதாடினுர்கள். எனினும் நியாயமான உரிமைகள் கிடைக்கவில்லை. எனவே வேறுவழி எதுவுமின்றி தமிழ் ஈழம்தான் முடிந்த முடிவெனக்கொண்டு இயங்க வேண்டியநிலைக்குத் தள்ளப் பட்டனர்,

அடுத்த மாதம் நடைபெறப் போகின்ற ஜனாதிபதி தேர்தலில் தமிழ்மக்கள் அக்கறை செலுத்தவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் இனிவரப் போகின்ற ஜனாதிபதி மூலமோ எதிர்காலத்தில்வரப்போகின்ற சிங்கள அரசு ஜனாதிபதிகள் மூலமே எதுவித பயனுமுல்லையென்பது வெள்ளிடைமலை. இந்தவகையில் எவர்தான் ஜனாதிபதியாக வந்தாலும் தமிழினம் தன்னுடைய பாதையிலிருந்து சற்றும் விலகாது நமது சித்தாந்தமாக விளங்கும் ஈழலட்சியப் பாதையில் சென்றுகொண்டிருக்க வேண்டும். எனவே தமிழினம் ஒருமைப்பாடான கருத்து, போக்கு ஆகியவற்றில் செயல் படுவதன்மூலம் தமிழ்மக்களின் தடைகளை நீக்க முன்வரவேண்டும்.

சி. உதயகுமார்
வர்த்தலைவிளான்,
தெல்லிப்பழை.

## பிரிவுபசாரம்

(நீர்வேலி)

நீர்வேலி கூட்டுறவுச்சங்கத்தின் எண்பார்வைப்பகுதிஉதவி ஆணையாளராகவிருந்து இளைப்பாறிய திரு. தி. சண்முகராசாவுக்கு வலி. கிழக்குத் தென்பகுதி ப. நோ கூட்டுறவுச் சங்கம் பிரிவுபசார வைபவம் ஒன்றை நடத்தியது:

சங்கத்தலைவர் திரு. செ.சபாரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் தேசிய கூட்டுறவுச் சபைத்தலைவரும் கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. மு. ஆலாலசுந்தரம் பேசுகையில் கூட்டுறவு இயக்கத்தின் முக்கிய பகுதியான கணக்கும் பகுதியைப் பரிசோதிக்கும் பணியில் ஈடுபட்ட திரு. சண்முகராசா கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு முதுகெலும்பாய் உழைத்தாரென்று குறிப்பிட்டார்.

இந்த வைபவத்தில் கூட்டுறவு இயக்கப் பிரமுகர்களான திரு கி. குமாரசாமி திரு. ச. செல்வரத்தினனம், திரு க.குமரேசபசுபதி, சிரேஷ்ட ஆணையாளர் திரு. எஸ். ஜெயகாந்தன், உதவி ஆணையாளர் வீ. நடராசா, கல்வி உத்தியோகஸ்தர் திரு. நீ- சிவசுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றினர்கள்.

## ★ ஜனாதிபதி தேர்தல்களம்

# ‘5கோரிக்கைகளை முன்வைத்து குமார் போட்டியிடுகிறார்’

-- மோதிலால்நேரு

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை ரீதியில் தமிழ் மக்கள் தங்கள் சுதந்திர உணர்வை வெளிக்காட்ட இந்த ஜனாதிபதி தேர்தல் நல்லதொரு வாய்ப்பாகும்.

யாழ். திறந்தவெளி அரங்கில் நடந்த ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய, ஜனாதிபதி வேட்பாளர் திரு. குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் மாநகர சபை உறுப்பினர் திரு. எஸ். யேசுதாசன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. குமார் பொன்னம்பலம் மேலும் கூறியதாவது: தமிழ் தேசிய இனம் நடத்தும் நேரடிப் போட்டியை முதல் தடவையாக தான் ஆரம்பித்துவைத்துள்ளேன்.

வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் தமிழ் ஈழம் அமைக்க கடந்த பொதுத் தேர்தல்மூலம் ஆணை வழங்கியுள்ளார்கள் வடக்கு கிழக்கு மகாணங்களுக்குவெளியில வாழும் தமிழ் பேசும் மக்களின் ஆணையை பெறுவதற்கு இத் தேர்தலை பயன்படுத்த வேண்டும்.

‘தமிழ் ஈழம்’ தேவை என்பதை இந்த அரசாங்கத்திற்கும், உலகத்திற்கும் எடுத்துக் காட்டவே இத் தேர்தலில் போட்டியிடுகின்றேன்.

### மோதிலால் பேச்சு

சட்டத்தரணி எம். மோதிலால்நேரு கூறியதாவது:

‘‘புதிய அரசியல் சாஸனத்தின்படி முதல் ஜனாதிபதி தேர்தல் நடைபெறுகிறது இன்றைய ஜனாதிபதியானவர் 5 நிமிஷங்களில் வர்த்தமானியில் விடும் அறிவித்தல்மூலம் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும்.

திரு. அமிர்தலிங்கமோ திரு. சிவசிதம்பரமோ, திருமதி சிறிமா பண்டாரநாயக்காவோ எதிர்காலத்தில் பிரதமராக செல்லலாம். ஆனால் அவர்களும் அதிகாரம் இல்லாத ஒரு சபைக்குத்தான் செல்லமுடியும்.

‘‘இந்திய ஜனாதிபதியாலோ, அமெரிக்க ஜனாதிபதியாலோ, மற்றும் ஜனநாயகம் நிலவும் எந்தநாட்டு ஜனாதிபதியாலோ ஒரு பாராளுமன்றத்தைக் கலைக்கமுடியாது ஆனால் இலங்கையின் புதிய அரசியலமைப்பின்படி தெரிவுசெய்யப்படப்போகும் ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தைக் கலைக்கும் உரிமை உண்டு.

‘‘போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்’’ என்று வீரமுழக்கமிட்ட ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, அநுராதபுரத்தில் அண்மையில் பேசுகையில் ‘‘தமிழ் மக்கள் தமிழீழம் கேட்டால் யாழ்ப்பாணத்தில் நிராயுதபாணியாகச் சென்று சத்தியாக்கிரகம் செய்யப்போவதாகச் சொன்னார். ஆனால் யாழ்ப்பாணத்துக்கு தேர்தல் பிரசாரம் செய்யவரும்பொழுது ஆயிரக்கணக்கான படை பட்டாளங்கள் புடைசூழ வரப்போகிறார்; எப்படி இருக்கிறது தர்மிஷ்டம்?

திரு. குமார் பொன்னம்பலம் ஜனாதிபதித் தேர்தலில் இறங்கியிருப்பது தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் நலனுக்காகவோ, தமது நலன் கருதியோ அல்ல; தமிழ் மக்களின் நலன் கருதி ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்துத்தான் ஜனாதிபதி தேர்தலில் அபேட்சகராக நின்று போட்டியிடுகின்றார்.

தமிழ் தேசிய இனம் சுதந்திரமாக வாழ தமக்கென ஒரு தாயகத்தை அமைத்தல்;

பயங்கரவாதச் சட்டத்தை ஒழித்தல்;

குட்டிமணி – ஜெகன் ஆகியோரின் தூக்குத்தண்டனையை இரத்துச்செய்தல்;

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்தல்;

வடபகுதியிலிருந்து ஆயுதப் படைகளை அகற்றுதல்;

இந்த ஐந்து கோரிக்கைகளையும் முன்வைத்துத்தான் திரு. குமார் பொன்னம்பலம் தமிழ் மக்களாகிய உங்கள்முன் வந்து வாக்குக் கேட்கிறார்.

இத்தேர்தலில் தமிழ் இனத்தின் இழந்த இறைமையை நிலைநாட்ட தமக்கென ஒருதாயகத்தை அமைக்க உங்கள் வாக்குகளைப் போடுங்கள் என்றார்.

மற்றும்பலர் பேசினர். (மா)

# ‘‘மக்களுக்கு மீண்டும் பங்கீட்டு அரிசிப் புத்தகங்களை வழங்குவேன்’’

## அம்பலாங் கொடையில் கொப்பேகடுவ

(அம்பலாங்கொடை)

‘‘அக்டோபர் 20ம் தேதி தான் ஜனாதிபதியாவேன் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. நான் ஜனாதிபதியானதும் 3 மாதத்தில் பாராளுமன்றத்தை கலைத்து தேர்தலை நடத்துவேன்.’’

அம்பலாங்கொடையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்பேசிய சுதந்திர கட்சி அபேட்சகர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவ மேற்கண்டவாறு கூறினார்.

திரு. கொப்பேகடுவ மேலும் கூறியதாவது: தேர்தலின் பின் சுதந்திர கட்சி அரசை அமைக்கும் நல்ல சந்தர்ப்பம் மக்களுக்கு கிடைக்கும். நான் உடனடியாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் உரிமையை வழங்குவேன் கம்யூனிஸ்ட் கட்சியும் திரு. அனில் முனசிங்காவின் கட்சியும் எனக்கு ஆதரவு வழங்கியுள்ளன.

1980ல் நடந்த வேலை நிறுத்தத்தின் போது வேலை இழந்த சகலருக்கும் வேலை வழங்குவேன் 1977ம் ஆண்டுக்குப்பின் வேலை இழந்த சகலருக்கும் வேலை வழங்குவேன்.

நான் ஜனாதிபதியானதும் மீண்டும் பங்கீட்டு அரிசிப்புத்தகங்களை மக்களுக்கு வழங்குவேன். இந்த அரசு ஆட்சிக்கு வருமுன் அனுபவித்த சகல உரிமைகளையும் மக்களுக்கு வழங்குவேன்.

கமபொல முன்னாள் எம். பி. திரு. டி. எம். ஜெயரத்ன பேசுகையில் ஜனாதிபதி தேர்தலில் திரு. கொப்பேகடுவா வெற்றி பெற்றால் அதுதான் யூ. என். பி. அரசின் முடிவாக இருக்கும் என்றார்.

இந்த அரசுநாட்டு மக்களுக்கும் இனத்திற்கும், சமயத்திற்கும் பெரும் கஷ்டங்கள் ஏற்படுத்தியுள்ளன. இந்த அரசை தூக்கி எறிவதற்கு மக்கள் சந்தர்ப்பத்தை எதிர் நோக்கியிருக்கிறார்கள்.

திரு. கொப்பேகடுவா தான் மிகவும் தராதரமுள்ளவராவர். அவர் வெற்றியின் பின் புதிய சமுதாயம் உருவாகும். (க)

# ‘‘நான் ஜனாதிபதியானால் பத்துமணி நேரத்தில் பாராளுமன்றத்தைக் கலைப்பேன்’’

-- றோகணவிஜயவீர

[கொழும்பு]

‘‘நான் ஜனாதிபதியானால் 10 மணி நேரத்தில் பாராளுமன்றத்தைக் கலைத்து நாட்டின் பிரச்னைகளைத் தீர்க்கக் கூடிய விசுவாசமுள்ள இளம் தலைவர்களைக் கொண்ட ஆட்சியை அமைக்க மக்களுக்குச் சந்தர்ப்பமளிப்பேன்’’

ஹொரவபொத்தனையில் நடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் திரு. றோகண விஜயவீர மேற்கண்டவாறு கூறினார்.

திரு. விஜயவீர மேலும் கூறியதாவது:

‘‘எனக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்தால் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளைத் தீர்த்துவைப்பேன். ஒரு போதும் யூ. என். பி. வாழ்க்கைச்செலவைக் குறைக்காது.

‘‘அரசாங்க ஊழியரின் ஓய்வு பெறும் வயது 55 ஆக இருக்கும்போது ஏன் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன 76 வயதாகியும் ஓய்வு பெறுமலிருக்கிறார்?’’

கொழும்பு மாவட்ட சபை உறுப்பினர் திரு. மகிந்த பத்திரான பேசுகையில் 1977ம் ஆண்டு தேர்தலில் யூ. என். பி. மக்களுக்கு பல வாக்குறுதிகளை அளித்ததாகவும், அதனையும் நிறைவேற்றவில்லையென்றும் கூறினார். (க)

# தெல்லி. ப. நோ. கூ. சங்கம் அமோக வெற்றி

[தெல்லிப்பழை]

யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுசபை கூட்டுறவு விழாவையொட்டி யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்கங்களிடையே நடத்திய போட்டி போட்டிகளில் அதிகப்படியான போட்டிகளில் பங்கு பற்றி தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம் அமோக வெற்றியைப் பெற்றது. இப் போட்டிகள் சிரேஷ்ட, கனிஷ்ட அங்கத்தவர், மகளிர், பணியாளர் போன்ற பிரிவுகளுக்கிடையே நடைபெற்றன. தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் இதில் 12 முதலாம்இடங்களையும்8இரண்டாம் இடங்களையும் ஒரு மூன்றும் இடத்தையும் பெற்றது. செல்வி த. ஞானவல்லி திருமதி ச. ஈஸ்வரி ஆகியோர் பட்டிமன்றத்தில் பங்குபற்றியதற்கான பரிசில்களையும், திருமதி குகவதி மாணிக்கவாசகர், செல்வி. ம. ஞானரூபி முதலுதவிப் பயிற்சியில் சித்தியடைந்தமைக்கான பரிசில்களையும் பெற்றனர்.

மேற்படி போட்டிகளில் பரிசுபெற்றோர் விபரம் பின் வருமாறு:–

முதலாம் இடங்கள்; கவிதை சி. உதயகுமார், சி. வாசுகி, பேச்சு; ப. சேந்தன், அமோகனாம்பிகை, ச. சாந்தமலர், சங்கீதம்; வே. ரவிக்குமார்,இ. ஈஸ்வரி, ந. உதயநிர்மலா, நாடகப்; ஊரங்குணை கிளை 37 விநோதஉடை திருமதி அப்புத்துரை, கைப்பணி; எஸ். லலித்தா, சைக்கிள் ஓட்டம் ஈனிற் இவோன் ஜான்ஸ்

இரண்டாம் இடங்கள்: கவிதை: இ. கமலேஸ்வரி, சு. ரேணுகா, கட்டுரை: கா. பூரணம், இ. கமலேஸ்வரி. பேச்சு. சே. விக்னேஸ்வரன், வே. சின்னத்துரை. வாசன ஊர்தி: வர்த்தலைவிளான் கிளை 15. கைப்பணி: செ. பாக்கியராணி.

மூன்றும் இடம்– நாடகம்; தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி. வாகன அலங்கார ஊர்தி: வர்த்தலைவிளான் கிளை 15 அலங்கார ஊர்தி தனிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடையே முதலாம் இடத்தைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தைப்பெற்றுக் கொண்டது. தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால், கூட்டுறவாளர் தின விழாவையொட்டி நடத்தப்பட்ட ஊர்திப்போட்டியிலும் இது முதலிடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (அ)

# பயிற்றப்பட்ட ஆசிரியருக்கு விரைவில் நியமனம்

(யாழ்ப்பாணம்)

சுவீகரிக்கப்படாத தோட்டப் பாடசாலைகளிலிருந்து ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியை முடித்துகவளியேறி இதுவரை அரச பட சாலைகளில் நியமனம் கிடைக்காதசகல பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கும் விரைவில் அரச நியமனம் வழங்கப்பட இருப்பதாக இ.த.ஆ.ச. பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார்.

1979ம் ஆண்டு டிசம்பரில் பயிற்சியை முடித்து வெளியேறிய பல தமிழ் ஆசிரியர்களுக்கு இதுவரை அரச நியமனம் வழங்கப்படவில்லை என்பதை கடந்த வாரம் கல்விச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் திரு. எம். எச். எச். ஆரியரத்தினவுக்குச் சுட்டிக்காட்டி நியமனம் வழங்க வேண்டும் என்று இ.த.ஆ.சங்கம் கோரிக்கை விடுத்தபோது இவ்வாசிரியர்களை இம்மாத முடிவில் மீண்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து பின்னர் அக்டோபர் 1ம் திகதியில் நியமனம் செய்ய ஆவன செய்வதாக உறுதியளிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதுவிஷயமாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துடன் தொடர்பு கொண்ட சகல ஆசிரியர்களின் பெயர் விபரம் அடங்கிய மகஜர் ஒன்றும் இ.த.ஆ.சங்கப் பொதுச் செயலாளர் திரு.த.மகாசிவத்தினால் கல்வி சேவை ஆணைக்குழுவிடம் வழங்கப்பட்டுள்ளது.

## புற்றுநோயாளர்களைக் கண்டுபிடிக்க

# கிராமமட்ட சுகாதார ஊழியர்களுக்குப் பயிற்சி

(மாவிட்டபுரம்)

கிராம மட்டத்தில் பணிபுரியும் சுகாதாரப் பகுதி ஊழியர்கள் புற்றுநோய்களை கண்டுபிடித்து அவர்களை தகுந்த சிகிச்சைக்குட்படுத்த வழிவகுக்கும் விதத்தில் அந்த ஊழியர்களுக்கு புற்றுநோய் பற்றிய பயிற்சிவகுப்பு ஒன்று நடத்தப்பட உள்ளது.

யாழ். மாவட்டத்திலேயே முதலாவதாக காங்கேசன் துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இம்மாதம் 23ம், 24ம் திகதிகளில் இந்த பயிற்சி வகுப்பு இடம்பெற உள்ளது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பலர் அதுபற்றி அறியாமலும், வெளியிலே அதனை சொல்லாமலும் இருப்பதால் அந்நோய் முற்றி மரணத்தை தழுவும் நிலை ஏற்படுகிறது

மிகவும் ஆபத்தான இந்நோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து சிகிச்சையளிப்பதன் மூலம் இதனை குணப்படுத்தலாம் என நம்பிக்கை தெரிவிக்கப்படுவதால் கிராமங்களில் உள்ள புற்றுநோயாளர்களை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து சிகிச்சையளிப்பதற்காகவே மேற்படி பயிற்சிநெறி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கிராம மட்டத்தில் கடமைபுரியும், சுகாதாரப் பரிசோதகர்கள், மருத்துவ தாதிகள் போன்றோருக்கு புற்றுநோயின் ஆரம்ப அறிகுறிகள் பற்றி இந்த பயிற்சி வகுப்பில் விரிவுரைகள் நிகழ்த்தப்பட உள்ளது.

கூடுதலாக பற்களிலேயே புற்றுநோய் ஏற்படுவது பற்றி பற்சிகிச்சை வைத்திய நிபுணர்கள் விரிவுரையாற்றுவார்கள்.

காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெறும் இப் பயிற்சிக்கான ஏற்பாடுகளை காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி திரு. இ. தெய்வேந்திரம் மேற்கொண்டுள்ளார்.

## கருத்தரங்கு

(சுழிபுரம்)

தொல்புரம்–மூளாய் ஐக்கிய நாணய சங்கங்களின் மேற்பார்வைச்சபையின் கருத்தரங்கும், ஆண்டுப் பொதுக்கூட்டமும் ஞாயிற்றுக்கிழமை பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஐக்கிய நாணய சங்கங்களின் தலைவர் திரு. சி. கார்த்திகேயர் தலைமையில் கருத்தரங்கு நடைபெறும்.

# மன்னாரில் மின்கட்டணம் குறைக்கப்படும்! பிரதமர் நடவடிக்கை

## அரசு காணிகளுக்கு நிரந்தர உறுதியும் அளிக்கப்படும்

(மன்னார்)

''மன்னார் பட்டினத்தில் அதிகரிக்கப்பட்டுள்ள மின்சாரக் கட்டணம் குறைக்கப்படும். இது சம்பந்தமாக பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா விசாரணை நடத்தி மின்சாரக் கட்டணத்தை குறைப்பதாக உறுதி அளித்துள்ளார். இத்துடன் மன்னார் மாவட்டத்தில் வழங்கப்பட்ட அரசு காணிகளுக்கு நிரந்தர உறுதியும் வழங்கப்படும்.

எல். டி. ஓ. அரசு காணிகளுக்கு இவ்வருடம் உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை. இதனால் எல். டி. ஓ. காணிகளை உத்தரவுப் பத்திரம் பெற்று விவசாயம் மேற்கொண்ட விவசாயிகள் இவ்வருடம் விவசாயத்தை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையைப் போக்கும் பொருட்டு காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா ஒரு மாத காலத்திற்குள் மன்னார் கச்சேரியில் வைத்து எல். டி. ஓ. காணி பெற்றவர்களுக்கு அக்காணியைச் சொந்தமாக்கும் பொருட்டு நிரந்தர உறுதிகளை வருங்குவார்''

இவ்வாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மன்னார் மாவட்ட ஐ. தே. கட்சி ஆதரவாளர்கள் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய முன்னாள் மன்னார் எம். பி. ஜனாப் எம். எஸ். ஏ. றகீம் தெரிவித்தார்.

மன்னார் அயின் படமாளிகையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மன்னார் மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. சுயஸ் பெல்டாகே ஜனாப் எஸ். கே. சாலுல்ஹமீது, மன்னார் மாவட்ட அமைச்சின் பிரத்தியேகச் செயலாளர் ஜனாப் கே. அக்பர், மன்னார் மாவட்ட அமைச்சின் பொதுசன தொடர்பதிகாரி திரு. பிலிப்பு, மன்னார் விவசாய அபிவிருத்தி அதிகாரசபை முகாமையாளர் திரு. எம். சந்தியாப்பிள்ளை, ஐ. தே. கட்சியின் மன்னார் மாவட்ட செயலாளர் திரு. சிறில் ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய முன்னாள் மன்னார் எம். பி. ஜனாப் எம். எஸ். றகீம் தமதுரையில், கூறியதாவது:

''நான் சிறிது காலம் சுகவீனமுற்றிருந்ததால் மக்களைப் பிரிந்திருந்தேன் இப்போது பூரண சுகமடைந்துவிட்டேன். மக்களுக்கு சேவை செய்வதே எனது நோக்கம். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்ததும் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்திக்காகப் பல உதவிகளை வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.

தேர்தலில் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டால் தான் மன்னார் மாவட்ட அபிவிருத்திக்கு உதவிசெய்ய முடியும்.

''கடந்த மாவட்ட அபிவிருத்திசபை தேர்தலின்போது தமிழ் பகுதிகளில் ஐ. தே. கட்சிக்கு அதிக வாக்குகள் கிடைத்த மாவட்டம் மன்னார் மாவட்டமாகும். இதை விட அதிகமான வாக்குகளை எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மன்னார் மாவட்ட ஐ. தே. கட்சிக்கு வழங்க வேண்டும்'' என்றார்.

ஐ தே. கட்சியின் மன்னார் மாவட்ட செயலாளர் திரு. சிறில் தமதுரையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் போது ஐ. தே. கட்சி ஆதரவாளர்கள் வேறு எந்தக் கட்சியினரையும் தாக்கிப் பேசக்கூடாது. கடந்த காலங்களில் ஐ. தே. கட்சி இந்நாட்டில் மேற்கொண்ட அபிவிருத்தி வேலைகளையே மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டும். திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவே மீண்டும் ஜனாதிபதியாக வர வேண்டுமெனவும், அப்போது தான் நாட்டை அபிவிருத்தியடையச் செய்ய முடியும் எனவும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் விரும்புகிறார்கள்.

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி வேலைகள் தொடர்ந்தும் நடைபெற வேண்டுமானால் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன மீண்டும் ஜனாதிபதியாக வர வேண்டும். தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இன்று தலை நிமிர்ந்து நிற்பதற்கு திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவே காரணம். அவர் கூட்டணி எம். பிக்களினூடாக மக்களுக்கு பல வேலைவாய்ப்புகளை வழங்கியுள்ளார்.

செல்வாவின் வழியில் நின்று தமிழ் மக்கள் எல்லோரும் ஐ. தே. கட்சியின் பொதுவேட்பாளரான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கே எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்கவேண்டும்'' என்றார்.

---

வவனியா சு. க. கூட்டத்தில்

## ஹெக்டர் கொப்பேகடுவா கலந்துகொள்வார்!

(வவனியா)

சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டம் இம்மாதம் 30-ம் திகதி வவனியாவில் நடைபெறவுள்ளது

சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி அபேட்சகரான திரு ஹெக்டர் கொப்பேகடுவவை ஆதரித்து இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

வவனியா நகரசபை திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ள இப்பிரசாரக் கூட்டத்துக்கு வன்னி தேர்தல் தொகுதி சுதந்திரக் கட்சிப் பிரதம அமைப்பாளர் திரு. மு. நடராசா தலைமைவகிப்பார்.

மன்னார், முல்லைத்தீவு போன்ற பகுதிகளிலும் இருந்து பெருமளவு கட்சி ஆதரவாளர்கள் இந்த பிரசாரக்கூட்டத்தில் கலந்து கொள்ள வருவார்கள் எனத் தெரியவருகிறது.

திரு. அனுரா பாண்டாரநாயக்கா, முன்னாள் அமைச்சர் திரு.கே.பி இரத்நாயக்கா, திரு. விஜய குமாரதுங்கா, திரு. ஹெக்டர் கொப்பேகடுவா. திரு. சண்முகலிங்கம் உட்படப் பல முன்னாள் சுதந்திரக்கட்சி அமைச்சர்களும் உரையாற்றவுள்ளனர்.

இதேவேளை இம்மாதம் 26ம் திகதி காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் நினைவு தினத்தன்று வவனியா சுதந்திரக் கட்சி மத்திய குழுவினால் வவனியா ஆஸ்பத்திரி பிள்ளையார் கோவிலில் அன்னதானம் வழங்கப்படவிருக்கிறது

கடந்த ஞாயிற்றுக்கிழமை வன்னி மாவட்டத் தேர்தல் தொகுதி சுதந்திரக் கட்சியின் செயற்குழுக் கூட்டமும் வவனியாவில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சுதந்திரக் கட்சியின் மைத்திரி பிரிவினரும் கலந்துகொண்டனர். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் சுதந்திரக் கட்சியின் அபேட்சகரான திரு. ஹெக்டர் கொப்பேகடுவவை இவர்கள் ஆதரிப்பார்கள்.

---

## படப்பிரதி இயந்திரம் அடிக்கடி பழுதாகிறது!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் பிறப்பு இறப்புப் பதிவு அலுவகலத்தில் உள்ள படப்பிரதிசெய்யும் யந்திரம் அடிக்கடி பழுதடைவதால், இவ்வலுவலகத்தில் பிறப்புப் பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளவர்கள் பல சிரமங்களுக்குள்ளாக வேண்டி ஏற்படுகிறது.

அவசரதேவைகளுக்கு பிறப்புப்பத்திரம் தேவை எனச் சிபார்சு செய்யப்படும் விண்ணப்பங்கள் எழுதிக் கொடுக்கப்படுகின்றன. யந்திரம் இயங்கும் நாட்களில் சிலர் ஒரு நாளிலேயே தமது பிறப்புப்பத்திரத்தைப் பெற்றுச் செல்வதும் உண்டு. என்றாலும் இந்த அலுவலகத்திற்கு தினமும் நூற்றுக் கணக்கில் குவிந்துவரும் விண்ணப்பங்களுக்குரிய பத்திரங்கள் வழங்குவதில் மந்த நிலை தொடர்ந்து இருந்துவருகின்றனர்.

அவசிய தேவைக்கு பிறப்புப் பத்திரம் தேவைப்படுபவர்கள் இந்த அலுவலக உதவியாளர், பதிவாளரிடம் தகுந்த ஆதாரம் காட்டியே உடனடித் தேவைக்கு உத்தரவு பெறவேண்டுமென்று இவ்வலுவலக பதிவாளர் சொன்ன போதிலும் எதுவித ஆதாரமும் காட்டாமல் உரிய விண்ணப்பச் சீட்டில் சிலர் செல்வாக்கின்மூலம் உத்தரவை வாங்கிக் கொள்வதை காண முடிகிறது. சில விண்ணப்பதாரர்கள் உண்மையில் அவசிய தேவையாக இருந்த போதும் இதற்கு சிபார்சு பெற முடியாமல் மனம் கசந்து போவதையும் காணமுடிகிறது.

யந்திரக் கோளாறுமட்டுமல்ல இங்கு வேறு கோளாறுகளும் காணப்பவதாக பல விண்ணப்பதாரர்கள் குறைப்படுவதையும் காணமுடிகிறது.

[மண-நிரு]

---


## விவசாயிகள் நன்மைகருதி வாடகைக்கு உழவுயந்திரம் கமநல சேவைநிலையம் உதவி

(பண்டத்தரிப்பு)

இப்பகுதியில் நீண்டகால வறட்சிக்குப் பின்பு பெய்த மழையை அடுத்து தமது காலபோக நெல்விதைப்பை இப்பகுதி விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர். தொல்புரம் கமநலச்சேவைப் பகுதியினர் விதைநெல்லைத் தேவையான விவசாயிகளுக்கு விநியோகம் செய்துவருகின்றனர். விதை நெல் தேவைப்படும் விவசாயிகள் தமது பகுதிப் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொண்டு கமநலசேவை நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளையில் விவசாயிகளின் நலன்கருதி நாலு சக்கர உழவுயந்திரம் ஒன்றும் உழுவதற்கு வாடகைக்கு இக் கமநலசேவைநிலையத்தினரால் விடப்பட்டுள்ளது. உழுவதற்கு பரப்புக்கு ஏழு ரூபா வீதம் கட்டணம் அறவிடப்பட்டு வருகின்றது என்றும், இப்பகுதி விவசாயிகள் இதனைப் பயன்படுத்தித் தமது உழவுவேலைகளைச் செய்யமுடியும் என்றும் தொல்புரம் கமநலசேவை பெரும்பாக உத்தியோகத்தர் திரு. சூசைப்பிள்ளை தெரிவித்தார். [அ]

---

## புதிய சமாதானநீதிபதி



[யாழ்ப்பாணம்]

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த திரு. வன்னித்தம்பி வயிரப்பிள்ளை சமாதான நீதவானாக மல்லாகம் மாவட்ட நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க நிதிக்குழு அங்கத்தவரும், மாவிட்டபுரம் ஐ. நா. ச. உப-காரியதரிசியும் மாவை மறுமலர்ச்சி மன்றஸ்தாபகரும், மாவிட்டபுரம் பாவனையாளர் சங்க நிர்வாக உறுப்பினரும், மாவிட்டபுரம் சாயுடை ஞானவைரவர் கோவில் தலைவரும், வீமன்காமம் மகாவித்தியாலய அபிவிருத்தி சங்க இணைச்செயளாளரும், தமிழர் விடுதலைக்கூட்டணியின் மாவிட்டபுரம் மூலக்கிளையின் உப-தலைவருமாவார். (க)

---

## மதிப்புரை

நூல்:

**திருமாலின் மகத்துவம்**

ஆசிரியர்: வித்துவான் மு. சபாரத்தினம்.

வெளியீடு: பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்.

விலை: 3 ரூபா.

சமீபத்தில் வரதராஜப் பெருமாள் தேவஸ்த்தான வருடாத மகோற்சவ காலத்தில் நடைபெற்ற சமய விரிவுரை தொகுப்பு நூலாக இது உள்ளது. திரு, சபாரத்தினம் அவர்களின் 10 நாள் விரிவுரைகள் இந்நூலில் இடம்பெற்றிருக்கின்றன. சைவ வைணவ ஒற்றுமைகள் கிருஷ்ணவதார நிகழ்ச்சிகள் பாரதத்தில் கிருஷ்ணனின் செயல்கள் என்பனவும் நம்மாழ்வார் வில்லிபுரத்தூராழ்வார் ஆகிய பெரியாழ்வார் என்னும் வைணவ அருளார்களின் செய்திகளும் இந்நூலில் இடம் பெற்றிருக்கின்றன. ஆலயத் திருவிழாக்களில் நிகழும் விரிவிரை நூலுருவம் பெற்றிருப்பது மட்டுமன்றி நூலின் வருவாய் இவ்வாலயத்தில் உருவாகும் சித்திரத் தேர்த்திருப்பணிக்கு எனக்குறித்திருப்பதும் வரவேற்கத்தக்க அம்சங்களாம். —அருளாளன்.

---

# "வாழும்போதே கலைஞர்களை கௌரவிக்க வேண்டும்!"

## அரசபரிசுபெற்ற கலைஞர்களுக்கு பாராட்டு

[கொழும்பு]

''கலைஞர்கள் இன, மத, மொழி வேறுபாட்டைக் கடந்தவர்கள். ஆதலால் அவர்களை வாழும்போதே கௌரவிக்கப்பட வேண்டும், இந்தவகையில் இன்று கௌரவப் பெறும் நாதஸ்வரக் கலைஞர் என். கே. பத்மநாதனும், பிரபலபாடகர் அல்ஹாஜ் மொஹிதீன்பேக்கும் கட்டாயம் கௌரவிக்கப்படவேண்டியவர்கள். இவர்களைக் கௌரவிப்பதன்மூலம் கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள் நல்லதொரு சேவையினைச் செய்துள்ளனர்.''

கட்டடக் கலைஞர் திரு. வி. எஸ். துரைராஜா இவ்வாறு தெரிவித்தார்.

கலாசூரிய பட்டமும், பத்தாயிரம் ரூபாபரிசும் பெற்ற இவ்விரு கலைஞர்களுக்கும் தேநீர் விருந்தளித்துக் கௌரவித்த வைபவத்தை பம்பலப்பிட்டி கிறீன்லன்ட்ஸ் ஹோட்டலில் 'கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள்' நடத்தினர்.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் தலைவர் திரு. இ. சிவகுருநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் உதவிச் சுவடிக் காப்பாளர் திரு. கே. நவசோதி பேசுகையில், 'இவ்வாறான பாராட்டு வைபவம் தலைநகரில் மட்டும் நடைபெற்றால் போதாது. தமிழர் வாழுமிடமெங்கும் நடத்தப்பட வேண்டும்' என்றார்

முஸ்லிம் பிரமுகர் சாஜஹான் ஹாஜியார், இசைக் கலைஞர் குலசீலநாதன் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர். பிரபல தொழிலதிபர் திரு. வி.ரி. வி. தெய்வநாயகம் பிள்ளை பரிசுபெற்ற கலைஞர்களுக்கு மலர்மாலை அணிவித்து மகிழ்ந்தார்.

பரிசுபெற்ற கலைஞர்கள்: என். கே. பத்மநாதன், அல்ஹாஜ் மொகிதீன் பேக்கும் தங்கள் பதிலுரையில் 'இன்று ஈழத்தில் நல்லரசிகர் கூட்டம் உருவாகியுள்ளது. அதேவேளையில் கலையை வளர்ப்பதில் பலரும் ஆர்வமும் காட்டிவருகின்றனர். இதனாலேயே கலைஞர்களாகிய நாம் முன்னால் வரக்கூடியதாக இருக்கிறது. ஆண்டவன் அருளும் ரசிகர்கள் நல்லாசியும் ஈழத்தில் கலைகளைவளர்க்கவும் கலைஞர்களை மேம்படச் செய்யவும் வழிவகுத்து வருகின்றது என்றனர்.

கலை, இலக்கிய பத்திரிகை நண்பர்கள்' செயலாளர் திரு. எஸ். திருச்செல்வம் நன்றி தெரிவித்துப் பேசினார்.

## யாழ். மாவட்டம்:

# ஜனாதிபதி தேர்தலில் 3,800 அரச ஊழியர்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி தேர்தலின்போது யாழ் மாவட்டத்தின் பதினொரு தேர்தல் தொகுதிகளிலும் மொத்தம் 3,800 அரச ஊழியர்கள் கடமையாற்றுவார்கள்.

தேர்தல் காலத்தில் 800 சிரேஷ்ட தலைமைதாங்கும் அதிகாரிகளும், 1000 கனிஷ்ட தலைமைதாங்கும் அதிகாரிகளும் 2000 லிகிதர்களும் 432 வாக்களிப்பு நிலையங்களில் பணியாற்றுவார்கள்.

தேர்தல் பயிற்சிப் பொறுப்பதிகாரியாக மேலதிக அரசாங்க அதிபர் திரு. எம்.பஞ்சலிங்கம் கடமையாற்றுவார்.

பயிற்சி வகுப்புகள் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் எட்டாம் திகதிவரை யாழ். செயலகத்திலும், பருத்தித்துறையிலும் நடைபெறவிருக்கிறது.

## தகவல் திணைக்களக்கிளை

(மன்னார்)

மன்னார் கச்சேரியில் தகவல் திணைக்களத்தின் கிளை நிலையம் ஒன்று இம்மாதம் 24ம் திகதி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு டக்ளஸ் லியன்கேயினால் திறந்து வைக்கப்படும்.

இத்தகவல் திணைக்களத்தின் கிளை நிலையத்தில் தகவல் திணைக்களத்தினால்வெளியிடப்படும் சஞ்சிகைகள் விற்பனை செய்யப்படும்.

தொடர்ந்து இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு பொது நிர்வாக விளையாட்டுக் களரியில் வைத்து பொது வரவேற்பளிக்கப்படும். (க)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு – சுபாஷினி
நெஞ்சத்தை கிள்ளாதே
(கலர்)

வெஸ்லி (மானிப்பாய்)
ஞானக்குழந்தை
24—30 வரை
நிறம்மாறுத பூக்கள்

ராஜா (யாழ். நகர்)
4 காட்சிகள்
பிரதாப்–ராதிகா
வசந்தத்தில் ஒரு வானவில்
(ஈஸ்ட்மன் கலர்)

றீகல் [யாழ்.நகர்]
தினசரி 10–30, 2–30, 6–15 9–30
ரஜனிகாந்த்–ரதி, ஜெய்சங்கர்
முரட்டுக்காளை
(கலர்)

சாந்தி [யாழ்.நகர்]
21—23
Daily 5 Shows
Steve Mc Queen in
THE HUNTER
Action—Color
விரைவில்! 'நான்!'

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஆயிரம்வாசல் இதயம்

லிடோ தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
எம்.ஜி.ஆர்.–ராதா சலுஜா
இதயக்கனி

6-வது மகளிர் வாரம்
வின்ஸர் தினசரி 4 காட்சிகள் (யாழ்.நகர்)
✶ சந்திரசேகர் ✶ சுபாஷினி ✶ ராஜீவ்
பாலைவனச்சோலை
விரைவில் : சிவாஜி, வாணிஸ்ரீ
வசந்தமாளிகை இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி

ராணி (யாழ் நகர்) இன்று 82வது தினம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]
24-முதல் பணமா பாசமா

மனோகரா (யாழ்ப்பாணம்) 10–30, 2–15, 4–45, 7–15, 9–30
WANG YU in
BLOOD OF THE DRAGON
(Scope—Color—Karate Film)

ஸ்ரீதர் (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை
எமது அடுத்த வெளியீடு
நம் நாடு

## இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 6ம் திகதி புதன்கிழமை

(22—9—82)

மேடம்: வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும், எதிலும் தாக்க மனப்பான்மை உருவாகும். சிநேகிதவழியால் கவலைகள் தோன்றக்கூடும். விவசாயிகளின் ஏமாற்றத்துக்கு இடமுண்டு.

இடபம்: இனிமையின் அணைப்பு இன்று உங்களுக்கு கிடைக்கும். இல்லம் பல்கலைக் கழகமாக மாறும், அறிஞர்களின் வருகை உங்களை உற்சாகப்படுத்தும். களஸ்திரவழியாலும் கண்ணியம் சேரும்.

மிதுனம்: சிரித்துப் பேசியவர்கள் இன்று சீறி விழுவார்கள். உதவி செய்யப்போய் உபத்திரவத்தை அணைத்துக் கொள்ள நேரிடும். சிலருக்குப் பதவி உயர்வும் தடைப்படலாம்.

கடகம்: பிதாவழி மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி ஒன்று கிடைக்கலாம். ஏழைகளிடத்தில் இரக்கம் காட்டுவீர்கள். பிறந்தகத்தின் நினைவு தலை தூக்கக்கூடும். பெரிய தகவல் கிடைக்கும்.

சிங்கம்: திருப்தியான மாற்றங்கட்கு இடமுண்டு நுட்பமான தொழில் புரிபவர்கள் பாராட்டப்படுவார்கள். திறமையான நடவடிக்கையின் மூலம் பணத்தைதேடிக்கொள்வீர்கள்.

கன்னி: வாழ்க்கை மலர் தூவிய மஞ்சமாகக் காட்சியளிக்கும் இன்பத்தின் எல்லைக்கே இழுத்துச் செல்லப்படுவீர்கள். சுற்றுலா மேற்கொள்ளும் விருப்பம் மேலிடலாம். தனச்சிறப்புக்கும்இடமுண்டு.

துலாம்: எதிர்பாராத செலவினங்களால் பாதிக்கப்படுவீர்கள். கடன் வாங்கவும் நேரிடலாம். சமீபத்தில் நடைபெற்று முடிந்த சம்பவம் ஒன்று மனதுக்கு வேதனையைத் தரலாம். இன்று மூதலீட்டைத் தவிர்க்கவும்.

விருச்சிகம்: எதிர்பார்த்த காரியத்தில் தடைகள் ஏற்படும். அவசர முடிவுஆபத்தில் சிக்கவைக்கலாம். குடும்பத்திலும் பதட்டநிலை தென்படும். இறை நம்பிக்கையும், எதையும் தாங்கும் இதயமும்வேண்டும்.

தனு: பேச்சு வன்மையால் பெரும் புகழ் சேரும். பெரியோர்களும் ஆசி கூறுவர். அரசியல் வாதிகளாயின் அதிக செல்வாக்கைப் பெறுவார்.

மகரம்: அமைதிக்குப்பங்கம் ஏற்படும் சம்பவங்கள் ஏற்படலாம். நெருங்கிய உறவினர் ஒருவருடைய உடல் நலம் பாதிக்கப்படலாம். வைத்தியச் செலவுக்கும் இடமுண்டு,

கும்பம்: திடீர் திருப்பங்கள் ஏற்படும், ஆரம்பத்தில் கடினமாகத் தோன்றியவைகள் இலகுவில் முடிவடையும். இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு புகழுரை கிடைக்கும்.

மீனம்: எதிர்பார்த்த பொருள் வரவுக்கும் இடமுண்டு. பூமியால் இலாபம்கிடைக்கும். புத்திரர்களின் வழிகளாலும் நன்மைகள் வந்துசேரும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## இன்று கருத்தரங்கு

(நீர்வேலி)

விதை உருளைக் கிழங்கைப் பேணிப்பாதுகாப்பது தொடர்பான கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் நீர்வேலியிலுள்ள வலிகிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. ச. மண்டபத்தில் தலைவர் திரு. செ. சபாரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் விவசாயத் திணைக்கள ஆராய்ச்சி நிபுணர்களும், யாழ்ப்பாண மாவட்ட விவசாய விரிவாக்க உத்தியோகத்தரும் விளக்கவுரை நிகழ்த்துவார்கள். [அ]

ஒப்பந்த வேலையை

# தொழிலாளரே செய்ததால் 2 லட்சம் ரூபா லாபம்!

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கான நிலக்கரியை இம்முறை லங்கா சீமெந்து லிமிட்டெட்டின் தொழிலாளர்களே கப்பலிருந்து இறக்குமதி செய்தமையால் 2 லட்ச ரூபா வரை லாபம் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கென நிலக்கரியுடன் காங்கேசன்துறைத் துறைமுகத்தை வந்தடையும் கப்பல்களில் இறக்குமதி வேலைகளை தனியாரே ஒப்பந்த அடிப்படையில் இதுவரை மேற்கொண்டு வந்தனர்.

ஆனால் இம்முறை லங்கா சீமெந்து லிமிட்டெட்டின் தொழிலாளர்களே இந்த இறக்குமதி வேலைகளை மேற்கொண்டனர். காங்கேசன் துறை துறைமுகத்தை வந்தடைந்த ''யுனி அமெரிக்கா'' என்னும் ஜப்பானிய கப்பலிருந்து 20 ஆயிரம் தொன் நிலக்கரியை தொழிலாளர்கள் இறக்கி முடித்துள்ளனர்.

இம்முறை தொழிலாளர்களே இறக்குமதி வேலைகளை மேற்கொண்டதன் மூலம் 2 லட்ச ரூபா வரை லாபம் கிடைத்துள்ளதாகவும், இதில் ஒருபகுதி தொழிலாளர்களுக்கு ஊக்குவிப்புப் பணமாக வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. [க

# 5 பிள்ளைகளின் தந்தை இளம் பெண்ணுடன் தலைமறைவாம்

(பண்டத்தரிப்பு)

தமது ஐந்து பிள்ளைகளையும் தம்மையும தவிக்கவிட்டுவிட்டு 16 வயது இளம்பெண் ஒருவருடன் தமது கணவர் மாயமாக மறைந்துவிட்டதாக மாதகலைச் சேர்ந்த பெண் ஒருவர் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்துள்ளார்.

தமக்குச் சொந்தமான நகைகளையும் தமது கணவர் எடுத்துச் சென்றிருப்பதாகவும் தமது முறைப்பாட்டில் இவர் தெரிவித்துள்ளார். காங்கேசன்துறைப் பொலிசார் இம்முறைப்பாடு தொடர்பாக விசாரணை நடத்திவருகின்றனர். [அ]

## இக்கிராமையில் புதுவீதி:

# "ஐம்பது ஆண்டு அவலம் சிரமதானத்தால்நீங்கியது"

(யாழ்ப்பாணம்)

'மல்லாகம் இக்கிராமைக் குறிச்சி மக்களின் நீண்ட கால கஷ்டங்கள் நீங்குவதற்கு முதலில் சிரமதானப் பணிமூலம் அமைக்கப்படும் போக்குவரத்துக்கான புதிய பாதை வழி சமைக்கும். நாம் மேற்கொண்ட சிரமதானப் பணியினால் அரை நூற்றாண்டுகாலமாக அவலமுற்ற இப்பகுதி மக்கள் குறுகிய தூரப் பாதையாலும்இரு குளங்களாலும் பயன் பெறுகின்றார்கள்.'

இவ் வாறு மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் இக் கிராமைக் குறிச்சியில் அரை மைல் தூரப்பாதை அமைத்தல், இரு குளங்களை ஆழமாக்கல் ஆகிய சிரமதானப்பணிகளை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு ஸ்ரீபாஸ்கரன் தமது உரையில் மேலும் கூறியதாவது: 'சமுதாய முன்னேற்றத்துக்கு பொதுமக்களும் அரச அதிகாரிகளும் ஒன்றிணைந்து செயல்படவேண்டும். இப் பகுதியில் வாழும் மக்களின் போக்குவரத்து வசதி மற்றும் இருப்பிட வசதிகள் பற்றி இதுவரை கவனிக்கப்படவில்லை. இன்று மேற்கொள்ளப்படும் சிரமதானத்துக்குக்கூட ஆதரவுதரப்படவில்லை. இதுவேதனைக்குரியதாகும். குடியிருப்புவசதிக்கும், மலசலகூடம் அமைப்பதற்கும் இரு நிறுவனங்கள் உதவிசெய்ய உள்ளன.' (உ)

## சுற்றுலா

[யாழ்ப்பாணம்]

மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் உறுப்பினர்களும், மல்லாகம் மாதர் சங்க உறுப்பினர்களும் மல்லாகம் கிராமஅபிவிருத்திப் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட சுற்றுலாவை மேற்கொண்டு விஸ்வமடுறெட்பார்ணுவுக்கும், முரசுமுட்டை நவஜீவனத்திக்கும், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் கோவிலுக்கும் நயினாதீவு பௌத்தவிகாரைக்கும், புங்குடுதீவு சிவன் கோவிலுக்கும் சென்று திரும்பியுள்ளனர்.

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் உட்பட 42 பேர் இடம் பெற்ற இச்சுற்றுலாவின்போது நயினாதீவு அமுதசுரபி அன்னதான சபையினரால் இவர்கள் வரவேற்று உபசரிக்கப்பட்டனர். இச்சுற்றுலா ஒழுங்கை மேற்படி சங்கத்தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் றெட்பார்ணுவின் உதவியுடனும், ஆசிரியர் திரு. சி. சிவானந்தன், அமுத சுரபி அன்னதான சபைத் பொருளாளர் திரு கா. க. சிவசிதம்பரம் ஆகியோரின் உதவியுடனும் ஒழுங்கு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். [உ

## தொலைக்காட்சி அன்பளிப்பு

சென்னை செப். 21

தமிழ்நாட்டிலுள்ள 50ஆதி திராவிட குடியிருப்புகளுக்கு மத்திய அரசு தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கவிருக்கிறது. முதல் 5 ஆதிதிராவிட குடியிருப்புகளுக்கு தொலைக் காட்சிப் பெட்டிகளை வழங்க தமிழக அரசு 25,000ரூபாவை வழங்கியுள்ளது. [க]

பஹாமா மகாநாடு

## இராசாராம் புறப்பட்டார்

சென்னை செப். 21

பஹாமாவில் அடுத்தமாதம் 16ந் திகதி ஆரம்பாகி ஒரு வாரம் நடைபெறும். காமன்வெல்த் நாடுகள் மகாநாட்டில் பங்குபற்றுவதற்காக தமிழக சட்டசபை சபாநாயகர் திரு. கே. ராசாராம் நேற்று புறப்பட்டார். சட்டசபை செயலாளர் திரு. ஜி எம். அழகாபுரியும் அவருடன் சென்றுள்ளார்.

25-ம் திகதி யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா

# தமிழறிஞர் துரைராஜசிங்கத்துக்கு இலக்கியக் கலாநிதிப் பட்டம்!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இம்மாதம் 25-ம்திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கும்பட்டமளிப்பு விழாவில் மலேஷியாவில் வாழும் இலங்கைத் தமிழறிஞர் திரு. எஸ். துரைராஜசிங்கத்துக்கு கௌரவ இலக்கியக்கலாநிதிப் பட்டம் அளித்து கௌரவிக்கவுள்ளது.

இவர் ஐம்பதுவருஷகாலமாக கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமிபற்றி துறைபோகஆராய்ந்தநிபுணர். இவரைப்பற்றி பல புத்தகங்களையும் எழுதி மலேசியாவில் வெளியிட்டுள்ளார்.

இந்தமுறை இவருக்கு மட்டும் தான் கௌரவப்பட்டம் வழங்கப்படவுள்ளது. இந்தப் பட்டமளிப்புவிழாவில் திரு. துரைராஜசிங்கம் பிரசன்னமாகாத நிலையில் இப்பட்டம் வழங்கப்படுகிறது.

யாழ். பல்கலைக்கழகத்தின் மூன்றாவது பட்டமளிப்புவிழா இதுவாகும்

## 463 மாணவருக்கு பட்டம்

25-ம்திகதிபிற்பகல் 3.40க்கு திறந்தவெளி அரங்கிலிருந்து யாழ். பல்கலைக்கழக வேந்தரும் ஓய்வுபெற்ற நீதியரசருமான திரு. வி மாணிக்கவாசகர் தலைமையில் பட்டம் பெறும் 463 மாணவர்கள் மூன்று குழுக்களாக அணி வகுத்து ஊர்வலமாக வீரசிங்கம் மண்டபத்தை வந்தடைவர்.

இந்த ஊர்வலத்தில் யாழ். பல்கலைக்கழக உபவேந்தர், பல்கலைக்கழகப் பிரமுகர்களும் அடங்குவர்.

வீரசிங்கம்மண்டபத்தை ஊர்வலம் வந்தடைந்ததும் மங்கலவாத்தியம் முழங்கும். வேந்தரும், உபவேந்தரும் சம்பிரதாய பூர்வமாக குத்து விளக்குகளை ஏற்றிவைப்பார்கள்.

கலைத்துறை பீடத் தலைவர் பேராசிரியர் கே. கைலாசபதி பட்டம் பெறுபவர் பற்றிய குறிப்புரைகளை வழங்குவார்.

## சிட்டிபாபு உரை

அண்ணாமலை பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எஸ். வி. சிட்டிபாபு பட்டமளிப்பு பேருரை நிகழ்த்துவார்.

இதைத்தொடர்ந்து பட்டமளிப்பு வைபவம் ஆரம்பமாகும்.

463மாணவர்கள் பட்டங்கள் பெறுவர்.

திரு. பி. கோபாலகிருஷ்ண ஐயருக்கு இந்துநாகரிகத்துறையில் தத்துவப்பட்டம் வழங்கப்படும். இப்பட்டம் வழங்கப்படுவது இதுவேமுதல் தடவையாகும்.

நான்குபேர் 'முதுமாணி'பட்டம் பெறுவர். அவர்கள் விபரம் வருமாறு!

திரு. அப்புக்குட்டிகணபதிப்பிள்ளை, கலைவாணி வல்லிபுரம், சந்திரலேகா வாமதேவ, ஜனாப் எம். ஏ நூஃமான்.

கர்நாடக இசைத்துறையில் 148 பேருக்கும் பரதநாட்டியத்துறையில் 16 பேருக்கும் கதகளித்துறையில் 4 பேருக்கும் பட்டங்கள் வழங்கப்படும்

மற்றும் வர்த்தகத்துறை இளம்கலைமானி 41 பேர், பட்டப்பின்படிப்பு 37 பேர்; கலைத்துறை இளம்கலைமானி 108 பேர், விஞ்ஞான இளம்கலைமாணி 104 பேர்.

இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் இசை-நாட்டியத்துறைகளில்உள்ளவர்களுக்கும் இம்முறை பட்டங்கள்வழங்கப்படுகிறது.

இறுதியாண்டு பரீட்சையில் திறமைச்சித்தியடைந்தமூன்று மாணவர்களுக்கு நினைவுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

செல்வி ஆர். வி. சூசை: (தமிழ்) (கமலாதேவி வித்தியானந்தன்)

திரு. எம். வேதநாதன்: (இந்துநாகரிகம் (கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி)

திரு. பொ. சிறிகாந்தா; [வரலாற்றுத்துறை] – கந்தவனம் கனகராஜா சங்கரப்பிள்ளை அன் சிவகாமசுந்தரி)

[மா]

வடபகுதி விவசாயிகட்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்!
நீங்கள் இதுவரை பெற்றிராத
சணல் விதை இயற்கைப் பசளை
எம்மிடம் உண்டு.
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-
முகாமையாளர்,
தேராங்கண்டல் எஸ்ரேட், துணுக்காய்.
4607

ஹவுஸ் புல் !!
ஷர்மிளா என்டர்டெயின்மென்ட்ஸ்
லெட்சுமி ஜூவலர்ஸ் இணைந்து அளிக்கும்
தென்இந்திய திரைப்பட புகழ் நாட்டியமணி
ஜெயமாலா வுடன்
மஞ்சுளா, மணிமாலா, விமலா, ராஜி
மற்றும் பலரின் நடன இசை நிகழ்ச்சி
இன்று (22-09-82)
இன்றும் - நாளையும்
மாலை 6-30 மணிக்கு
யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
டிக்கெற் கிடைக்கும் இடங்கள்:
- வீனஸ் றேடியோ வாச்வேக்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
- விமாகி, 27/3, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
- றிக்கோ சுவீற்ஸ் அன் கிறீம் கவுஸ், 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- சிவராசா அன் கொம்பனி, பஸ் ஸ்ராண்ட், பருத்தித்துறை.
- லக்னி வாசா, 16, 2-ம் குறுக்கு வீதி, நல்லூர்.
4581

## ஜனாதிபதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திகதியளவில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா இதனை திறந்துவைப்பார் எனத்தெரிவிக்கப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஆனால் 10ம் திகதி ஜனாதிபதிக்கு நேரம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டதால் அக்டோபர் 3ம் திகதிஅவர் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்திற்காக யாழ்ப்பாணம் வரும்போது இதனை திறந்து வைக்கலாமென முடிவு செய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதியின் வரவேற்பு ஒழுங்குகளைக் கவனிக்க காங்கேசன்துறைசிமெந்துதொழிற்சாலையில் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டு அது வேண்டிய ஏற்பாடுகளைசெய்து வந்தது, ஆனால் தற்போது இந்த 3ம் கட்டப்பிரிவின் திறப்புவிழா வைபவம் ஒத்திப்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக வரவேற்பு ஒழுங்குகளைக் கவனித்த குழுவினரும் தமது நடவடிக்கைகளை நிறுத்தியுள்ளனர்.

அக்டோபர் 3ம்திகதிக்கிடையில் சகலவேலைகளையும்பூர்த்தி செய்ய முடியாமலிருப்பதாலேயே இத்திறப்புவிழா ஒத்திப்போடப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தலின் பின்னர் இது நடைபெற இருப்பதாகவும் கூறப்படுகிறது.

## உடன் நட...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யிலும் பலதடவைகள் நாங்கள் தெரிவித்தபோது, பிரயாணிகள் பாதுகாப்புடன் பிரயாணம் செய்யலாம் என்று வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருந்தன. ஆனால் நிலைமை மேலும்மோசமடைந்துள்ளது.

''இந்தக் கொள்ளை, தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக கடந்த ஆண்டு ஒரு மாநாடு கூட்ட ப்பட்டது. அம்மகாநாட்டில் பிரதிப் பொலிஸ் மா அதிபர், பிரதி போக்குவரத்து அமைச்சர், மற்றும் புகையிரதப் பகுதி பாதுகாப்பு அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

புகையிரதவண்டிகளில்நடைபெறும் கொள்ளைகள், பலாத்காரத் தாக் தல் சம்பவங்களை எப்படி அடக்கலாம் என்று அந்த மாநாட்டில்ஆலோசித்து ஒரு முடிவு எடுக்கப்பட்டது. அதன் அறிக்கை கூட எனது கைவசம் உள்ளது.

''கொழும்பு – காங்கேசன் துறை மெயில் புகையிரத வண்டியில் நடைபெற்ற சம்பவங்களை நான் நினைத்துப்பார்க்கும் பொழுது அந்த அறிக்கை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று எண்ணுகின்றேன்.

# இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாண கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) உப அலுவலகம் திறக்கப்பட்டு ஒரு வாரம்தான் ஆகிறது.

விண்ணப்பப்படிவங்களுக்கு இங்கு பற்றுக்குறை நிலவுகிறது போலும்!

மூன்று ரூபா முதல் பத்து ரூபா வரை விண்ணப்பப் படிவங்கள் வெளியே பரவலாக விற்கப்படுகின்றன!

'ஊடுருவி,

# மண்டலசார்பற்ற நாடுகள் உச்சிமாநாடு இந்தியாவில்

புதுடில்லி, செப். 21

மண்டல சார்பற்ற நாடுகளின் உச்சி மாநாட்டை இந்தியாவில் நடத்துவதென உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது

இம்மாநாட்டை பாக்தாத்தில் நடத்துவதென ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருந்தபோதும், ஈராக்–ஈரான் போரினால் இடத்தைமாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்தியாவில் உச்சி மாநாட்டை நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டதற்கு பாரதத் தூதுவர் திரு. என். கிருஷ்ணன் மண்டல சார்பற்ற நாடுகளுக்கு நன்றி தெரிவித்தார்.

அடுத்த மாதம் நியூயோர்க்கில் நடைபெறவிருக்கும், மண்டல சார்பற்ற நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் மாநாட்டில், உச்சி மாநாட்டிற்கான தேதியை இந்தியப் பிரதிநிதி அறிவிப்பார். [க]

## சட்டவிரோதமான மின்சக்தி

(கொக்குவில்)

சட்டவிரோதமான முறையில் குளிர்சாதனப்பெட்டிக்கு மின்இணைப்பு ஏற்படுத்தி தொடர்ச்சியாகப் பலமாதகாலம் மின் வசதி பெற்றுவந்த ஒருவரது கடையின் மின்சக்தி துண்டிக்கப்பட்டதுடன் இச்சட்டவிரோத நடவடிக்கைக்காக ரூ. 1,600 அபராதம் அவருக்கு விதிக்கப்பட்டுள்ளது

கொக்குவிலில் சந்தியில், ஒரு கடையின் உரிமையாளரான எஸ். ரி. குமாரசாமி என்பவருக்கே கொக்குவில் மாவட்ட அபிவிருத்திசபை உபபணியகத்தைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற அதிகாரி திரு கே. சிவபாதம் மேற்படி அபராதத்தை விதித்துள்ளார்.

எதுவிதக் கட்டணமும் இன்றி சட்டவிரோதமாகத் தமது கடையிலுள்ள குளிர்சாதனப்பெட்டிக்கு பலமாதகாலமாக மின் சக்திபெற்று வந்தார் என்று எஸ். ரி. குமாரசாமி மீது குற்றம் சுமத்தப்பட்டு மேற்படி அபராதப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் சட்டவிரோதமான முறையில் மின் இணைப்பு ஏற்படுத்தி மின்சக்தி பெற்றுவருவோரைக் கண்டு பிடித்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவும் உப பணியகம் இப்பொழுது உஷாராகி வருகிறது.

## 3 சந்தேக..,

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தவர்களில் 13 பேர் யாழ். பொலிஸ் நிலையத்தில் புகார் செய்தனர். மூவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

''தாக்குதல் – கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் பொல்காவலையில் ஏறி வவனியாவுக்கும் – புளியங்குளத்துக்குமிடையில்வைத்தே கொள்ளையில் ஈடுபட்டிருக்கிறார்கள். உடனடியாக இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதுடன், அப்பாவிப் பிரயாணிகள் மீது இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாத விதத்தில் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.'' [மா]

## கொழும்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞல் தங்கள் நகைகளையும். கைக்கடிகாரங்களையும் கழட்டி கொடுத்ததாக கூறப்படுகிறது.

பெட்டியிலிருந்த சூட்கேசுகளையும் கொள்ளையர்கள் எடுத்துச் சென்றனர்.

### தாலிக்கொடி இழுபறி

ஒருவயோதிபப் பெண்அணிந்திருந்த 20 தங்கப்பவுண் தாலிக்கொடியை தலையால் கழற்ற முடியாத நிலையில் இழுத்து எடுத்தபோது கழுத்தில் பலமான காயம்ஏற்பட்டதாகவும், நீண்ட நேர இழுபறிக்கு பின்னரே தாலிக்கொடி அறுத்துச் செல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

மற்றொரு இளம் பெண் அணிந்திருந்த ஜிப்சியை கழற்றத் தாமதமாகியதால் கொள்ளையர் அதனை அறுத்தபோது காதில் ஒரு துண்டும் அறுந்துள்ளதாக கூறப்படுகிறது.

யாழ். பொலிசில் கடமையாற்றும் ஒருவரின் உறவினர் கொள்ளையரை எதிர்த்துப் [illegible]டிய போது, உடைந்த சோடா போத்தலால் அவரின் நெஞ்சில் குத்தப்பட்டு [illegible] ஏற்பட்டதாகவும கூறப்படுகிறது.

ரயில இரைச்சலுடன் ஓடிக்கொண்டிருந்த போது உறங்கலிருக்கை பெட்டி அல்லோல கல்லோலப்பட்ட[illegible].

### பயங்கர ஆயுதங்கள்

பிரயாணிகள் மற்றபெட்டிகளுக்கு ஓடிச்செல்ல முடியாதபடி வாசலில் பயங்கர ஆயுதங்களுடன் காவல் நின்றார்களாம்.

ரயில் இன்ஜினுக்கு அடுத்த பெட்டியாக இருந்ததால், பிரயாணிகள் போட்ட அவலக் கூச்சல் அடுத்தபெட்டியிலிருந்தவர்களுக்கு கேட்கமுடியாமல் போய்விட்டதாக பிரயாணி ஒருவர் தெரிவித்தார்.

ஒரு பெண்ணின் நெஞ்சில் உடைந்தசோடா போத்தலால் பலமாக குத்தப்பட்டதாகவும் அப்பெண் ரத்தம் வடிந்தோடிய நிலையில் மயங்கி விழுந்ததாகவும பிரயாணி ஒருவர் தெரிவித்தார்.

ஓமந்தையை ரயில் செல்லுமுன் கொள்ளையர்கள் இறங்கி ஓடிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

கொள்ளையர் ஒருவர் 20 கைக்கடிகாரங்கள், தாலிக்கொடி, சங்கிலிகளுடன் பொலிசாரிடம் சிக்கிக்கொண்டதாக கடைசியாக கிடைத்த தகவல்கூறுகிறது. காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (க)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] 1962 [illegible] செப். 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 1662[illegible]
Eelanadu — P. O. Box49 Tleegram: 'Eelanadu' T'phone: 9[illegible] and 812[illegible].